# தமிழர் பொருண்மியம்


வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 85 | 24.11.2024





## "வில்லியம் ஹென்றி 'பில்' கேட்ஸ்" டிஜிட்டல் யுகத்தின் முன்னோடி

எங்கட வாழ்வியல் 08



இலங்கையர்கள் ஏன் வரி செலுத்தத் தயங்குகிறார்கள்? 10



பழந்தமிழரின் பயிர்ப்பாதுகாப்பு முறைகள் 14



கேணல் சாண்டர்ஸின்- KFC சிக்கன் உருவான கதை 21


பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# “வில்லியம் ஹென்றி ‘பில்’ கேட்ஸ்” டிஜிட்டல் யுகத்தின் முன்னோடி

**நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன் ஆனால் அனுபவமோதவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.**

**- பில் கேட்ஸ்**

தொகுப்பு: ஆத்மிகா ஞானரூபன்
யாழ் /சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

பில் கேட்ஸ் (William Henry Bill Gates III) என்றால் இன்றைய உலகில் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. இந்த நிமிடம் தொடங்கி ஒவ்வொரு நிமிடமும் உங்களுக்கு 2600 அமெரிக்க டாலரைத் தரப்போகிறது ஒரு தேவதை என்று வைத்துக் கொள்வோம். ஓய்வில்லாமல் 24 மணி நேரமும் ஒவ்வொரு நிமிடமும் அந்த தேவதை உங்களுக்கு 2600 அமெரிக்க டாலரைத் தருகிறது அதுவும் ஒரு நாளுக்கு அல்ல ஒரு ஆண்டுக்கு அல்ல 21 ஆண்டுகளுக்கு அப்போது உங்களிடம் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்?

கொடுக்கும் தேவதைக்கே தெரியாமல் போனாலும் ஆச்சரியமில்லை எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் நிமிடத்திற்கு 2600 அமெரிக்க டாலர் என்ற விகிதத்தில் 21 ஆண்டுகள் எவ்வளவு நிதி சேருமோ அவ்வுளவு நிதிக்கும் இப்போதே சொந்தக்காரராக இருக்கும் ஒருவரை அறிமுகம் செய்து வைக்கத்தான்… ஆம் உலகின் ஆகப் பெரிய பணக்காரர் என்ற பெருமையை தொடர்ந்து 11 ஆண்டுகளாக பெற்று வந்த அவர்தான் ‘கணினி உலகம்’ என்ற வானத்தை வசப்படுத்திய ஃபில்கேட்ஸ்…

கடந்த இரண்டுத் தலைமுறைகளில் பில் கேட்ஸ் அளவிற்கு உலக மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய எவரும் இருக்க முடியாது. உலகின் போக்கையே மாற்றியமைத்துவிட்ட சாதனையாளர். மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைமைக் கணனி மென்பொருளாரும், அதன் தலைமை நிறைவேற்று அதிகாரியும் ஆன “பில் கேட்ஸ்” தொடர்ந்து பல வருடங்களாக உலக பணக்காரர்கள் வரிசையில் முதலிடத்திலேயே இருந்து வருகிறார்.

1999 களிலேயே இவரது சொத்தின் மதிப்பு 100 பில்லியன்கள் ஆகும். இன்று இவரது மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் உலகெங்குமாக 78,000 பேர்கள், 105 நாடுகளில் சேவை புரிகின்றனர். உலகில் தற்போது உயிருடன் இருப்போரில் மைக்ரசொஃப்ட் நிறுவனரும் பெரும் கொடையாளியுமான பில் கேட்ஸ் தான் அனேகமானோரால் விரும்பப்படும் மனிதர் என்று சர்வதேச ஆய்வொன்று கூறுகிறது.




சிறுவயதில் இருந்து கணினி மென்பொருள் துறையில் சுய விடாமுயர்ச்சியினால் முன்னேறி வெற்றி வாகை சூடி உலகக் கோடீஸ்வரர் எனப் பெயர்பெற்ற மைக்ரோசொப்ட் அதிபர் பில்கேட்ஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம் .

1955ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் அமெரிக்காவில் சியாடில் (Seattle) என்ற ஓர் அழகிய அற்புதமான இயற்கை எழில் கொஞ்சும் நகரில் பிறந்தார் வில்லியம் ஹென்றி கேட்ஸ் அவருக்கு 2 சகோதரிகள், தந்தை “வில்லியம் கெச் கேட்ஸ்” ஒரு சிறந்த வழக்கறிஞர் தாயார் “மேரி மேக்ஸ்வெல்” வாசிங்டன் (Washington) பல்கலைக்கழகத்தின் பள்ளி ஆசிரியை.

Related: Adolf Hitler History in Tamil

இவர்களின் மகனான பில் கேட்ஸ் சிறு வயதிலேயே கணிதம், அறிவியல் பாடங்களில் சிறந்து விளங்கியுள்ளார். ஆரம்பித்தில் மிகவும் கூச்ச சுபாவம் உடைய பில்கேட்ஸ் தனிமையை அதிகம் விரும்புவார். எப்போதுமே ஏதாவது ஒரு சிந்தனையில் ஈடுபட்டிருப்பார் சக வயது மாணவர்கள் விரைவுக் கார்களையும் திரைப்படங்களையும் பற்றி எண்ணிக்கொண்டிருக்க பில் கேட்ஸ் மட்டும் எண்களைப் பற்றியும் அவற்றின் மந்திரம் பற்றியும் சிந்தித்து கொண்டிருப்பார் வாழ்க்கையில் வெற்றிப்பெற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு சிறு வயதிலேயே துளிர்விடத் துவங்கியது.

பில்கேட்ஸ் தனது பதின்மூன்றாவது வயதில் சியாடில் பகுதியில் சிறந்தப் பாடசாலையான லேக்சைட் பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். அங்கு கல்வி கற்கும் காலங்களில் இவரது கணனி ஆர்வமும் திறமையும் ஆசிரியர்களால் இனங்காணப்பட்டது. சிறு வயது முதலே மென்பொருள் எழுதுவதில் ஆர்வமுள்ளவரானார். பாடசாலையில் முதலாவது மாணவனாக பில் கேட்ஸ் திகழ்ந்ததால் இவர் ஆசிரியர்களின் செல்ல மாணவனாக திகழ்ந்தார்.

அக்காலத்தில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் கூடக் கணினி ஓர் ஆடம்பரப் பொருளாக, அனைவருக்கும் எட்டாத ஒரு கருவியாக இருந்தது. லேக்சைட் பள்ளியில் ஒரு கணினி (உண்மையில் அது ஒரு டெலிப்ரிண்டர் வகையை சேர்ந்தது ஆகும்) மற்றும் தினசரி சில மணி நேர கணினி (இது General Electric நிறுவனத்தின் கணினி ஆகும்) பயன்பாட்டுக்காக வாங்க பட்டது. மாணவர்களுக்கு கணினி பயன்று கொள்ள வசதியாக இருக்கும் என்பதே இதன் நோக்கம் ஆகும். கேட்ஸ் இதை நன்றாக பயன்படுத்தி கொண்டார்.

பில் கேட்ஸ் தனது முதல் கணினி நிரலை டிக்-டக்-டே விளையாட்டுக்காக எழுதினார், அது பயனாளர்களை கணினிக்கு எதிராக விளையாட வழி வகுத்தது. இவரது ஆர்வத்தை பார்த்து பள்ளி இவருக்கு கணித வகுப்பில் இருந்து விலக்கு அளித்தது, அதன் மூலம் இவரால் அதிக நேரம் கணினி பயிற்சியில் ஈடுபட முடிந்தது. ஆனால், கேட்ஸ் மற்றும் இதர மாணவர்கள் கணினியின் இயங்கு தளத்தில் (Operating System) உள்ள

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

ஒட்டைகளை பயன்படுத்தி அதிக கணினி நேரத்தை உபயோகித்தாக குறை கூறி தினசரி சில மணி நேர கணினி பயன்பாட்டு திட்டம் பயன்படுத்த தடை செய்யப்பட்டது.

அப்போது கணினியை பயன்படுத்திக் கொண்டவர்களில் முக்கியமானவர்கள் பில் கேட்ஸும் அவன் நண்பன் பால் ஆலனும் (Paul Allen) ஆவர். இவர்களில் பில்கேட்ஸ் எட்டாம் வகுப்பு மாணவனாகவும் பால் ஆலன் பத்தாம் வகுப்பு மாணவன் ஆகவும் இருந்தனர். ஆனால் கணினிக் கல்வியைக் கற்பதில் இருவருக்கும் தணியாத ஆர்வம், தீராத தாகம். அனால் அவர்களின் பாடசாலையில் திறமையான கணினி ஆசிரியர் கூட அப்போது இருக்கவில்லை. இருப்பினும் இரு நண்பர்களும் ஆசிரியர்களே வியக்கும் வகையில் தங்களின் கணினி அறிவை வளர்த்துக் கொண்டார்கள். கணினித் தொழிற்பாடு பற்றிய நூல்களை எல்லாம் ஆர்வமாக தேடித் படித்தார்கள்.

ப்ரோக்ராம்மிங் (Programming) மொழியில் இவர்களுக்கு தனி வெறியே ஏற்பட்டுவிட்டது எனலாம். இதனால் இவர்களுக்கு இரவு, பகல் என்று கிடையாது. பாடசாலை நேரம், விடுமுறை என்று கிடையாது. கடும் பயிற்சியில் இருவரும் ஈடுபட்டனர். நடைமுறை வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் ப்ரோக்ராம்மிங் மொழிகளை உருவாக்க பில் ஆர்வம் கொண்டான். சுருக்கச் சொன்னால் கணினியால் இருவரும் புகுந்து விளையாடிப் புதுமைகள் காண விரும்பினர்.

Related: Alexander history in Tamil

ஆனால் அக்கால கட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிதி நெருக்கடி காரணமாக பிள்ளைகளின் பெற்றோர்களிடம் நிதி அறவிட்டு செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது மட்டுப்படுத்தப்பட்ட நேரம் வழங்கப்பட்டது. அது பில்லுக்கு போதுமானதாக காணப் படவில்லை.

பாடசாலையில் கணினிக் கல்விக்கு ஆபத்து நேரிட்ட போதும் பில்லும், பாலுவும் பல்கலைக்கழக இளைஞர்களின் ஸி.ஸி.ஸி நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்கள். இவர்கள் அவர்களைவிடச் சிறியவர்களாக காணப்பட்டமையால் இவர்களின் திறமையில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனாலும் பில்லுக்கும், பாலுக்கும் மீண்டும் நீண்ட நேரம் கணினியுடன் உறவாட வாய்ப்புக் கிடைத்தது.

பாடசாலைக் கல்வியை முடித்த பிறகு மேல் படிப்பை தொடர்ந்து அப்பாவைப்போல் வக்கீலாகி விட வேண்டும் என்று குடும்பத்தினரும் உறவினர்களும் வற்புறுத்தினர். ஆனால் பில்லின் ஆழ்மனதில் விதைக்கப்பட்ட கணினிக் கனவுகள், கணினி ப்ரோக்ராம்மிங் யை சுற்றி சுற்றி வந்தன.

பில்லும், பாலும் அங்கு உள்ளவர்களை விடத் திறமையாக நேரகாலம் பாராது வேலை செய்த போதும் அவர்களுக்கு மாணவர்களுக்குரிய கொடுப்பனவே வழங்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் பணத்திற்காக அங்கு வேலை செய்யவில்லை. கணினியுடன் வேலை செய்யும் வாய்ப்புக்காக பணியை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். இதில் வெற்றி கண்டனர்.

இதன் பின்னர் பாடசாலை இறுதித் தேர்விலும் சிறப்பாக வெற்றி பெற்றார் பில். ஆனால் பாலு பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுவிட்டான். மேலும் பில் பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்க வக்கீல் கல்வியை அவரால் தொடர முடியாத நிலையில் இடைநிறுத்தினார்.

அதன் பின்னர் பில்லும் பாலும் ஒரு கணினி நிறுவனத்தை ஆரம்பிப்பது பற்றி கனவு காண்பார்கள். திட்டம் தீட்டுவார்கள். விவாதிப்பார்கள். ஆனால் நிதி நெருக்கடியினால் அவர்கள் திட்டத்தை தள்ளிப் போட்டு விட்டார்கள்.

அவர்களிடம் ஆசை, ஆற்றல், அறிவு, அனுபவமும் இருந்தது ஆனால் காலம் மட்டும் கனியவில்லை. 1974 ம் ஆண்டு இன்டெல் (intel) நிறுவனம் புதிய Micro Processor யை அறிமுகம் செய்தது. அதன் ப்ரோக்ராம்மிங் பணிக்கு அந்நிறுவனம் பில், பால் இடமும் உதவியை நாடியது. இச்சந்தர்ப்பத்தைச் சரியாக



பயன்படுத்தி வெற்றி காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் COBOL, FORTRON, PASCAL போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்ற அவர்கள் BASIC முறையில் ப்ரோக்ராம்மிங் எழுத ஆரம்பித்தனர்.

அனால் இப்பணியை "விரைவாக, பிழையின்றி, மற்றவர்களை முந்திக்கொண்டு, சரியாக முடிக்க வேண்டும்", என்று எண்ணினார்கள். அல்லாவிட்டால் தமது இரவு பகல் பாராது உழைத்த கடினமான உழைப்பு பயனற்றுப் போய்விடும் என்று எண்ணினார்கள்.

இவர்களின் விடாமுயற்சியினால் எழுதப்பட்ட ப்ரோக்ராம்மிங் ஆனது பரிசோதித்து பார்க்கப்பட்டது. முயற்சி வெற்றி கண்டது. இதனால் மகிழ்ச்சியடைந்த பில்லின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அப்போது பில்லுக்கு இருபது வயது .இந்த வெற்றியின் திருப்பு முனை அவர்களை உலகறியச் செய்தது.

1977 ஆம் ஆண்டு ஆல்புகர்க் நகரின் மிகப் பெரிய அடுக்கு மாடிக் கட்டடத்தின் எட்டாவது மாடியில் ஒரு அறையில் இவர்கள் மைக்ரோசாப்ட் (Microsoft) நிறுவனத்தை ஆரம்பித்தனர். அந்த அறையில் அங்கும் இங்குமாகக் கணினிகள் கிடந்தன. விசைப்பலகைகளில் சில விரல்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அங்கு சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் ரைப்பிரைட்டரில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

திடீரென புயல் போல ஒரு பையன் அந்த அறைக்குள் நுழைந்து நிர்வாகியின் அறைக்குள் போய்க் கொண்டிருந்தான். ஹலோ..ஹலோ ..யாரது? முதலாளி ஊரில் இல்லை என உரக்க குரல் கொடுத்தார். ஏனெனில் வெளியார் யாரும் அந்த அறைக்குள் நுழையக் கூடாது என்பது உத்தரவு. அவனோ கதிரையில் அமர்ந்து கணினியில் கவனம் செலுத்த ஆரம்பித்தான். அந்தப் பெண் புதிதாக நியமனம் பெற்றவள்.

அவள் வேகமாக தனது அலுவலகரை நோக்கிச் சென்று சார் யாரோ ஒரு பையன். அவள் முடிக்கவில்லை அவர் சிரித்தபடி பையனா? அவர் தான் இந்தக் கம்பனியின் முதலாளி பில்கேட்ஸ் என்றார். அந்தப் பெண்ணின் விழிகள் வியப்பில் விரிந்தன. இருபது வயது இந்த சின்ன பெடியன் இக் கம்பனியின் முதலாளியா? நம்பவே முடியவில்லை? ஆனால் உண்மை அதுதான்.



Related: Che Guevara History in Tamil

அச்சிறிய கம்பனி நாளொரு மேனியும்

தொடர்ச்சி 13ம் பக்கம்....

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# அரிசியை இறக்குமதி செய்யும் இலங்கை

இலங்கை தற்போது அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறதுஆம் உள்நாட்டு அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட குறைவுகள் மற்றும் விலையேற்றத்தை சமாளிக்க, இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் மியான்மார் போன்ற நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்துள்ளது .

இந்தியா, சில ஏற்றுமதி கட்டுப்பாடுகளை தளர்த்தி, இலங்கைக்கு அரிசி அனுப்புவதை எளிதாக்கியது. இதற்கு குறிப்பாக மத்திய அரசு கையாண்ட குறைந்தபட்ச ஏற்றுமதி விலை (ஆநீ) அமைப்பு உதவியாக இருந்தது .இலங்கையில் உர தட்டுப்பாடுகள் மற்றும் காலநிலை சவால்களால் உள்நாட்டு அரிசி உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இதனால், இறக்குமதிகள் அவசியமாகின .

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, நாட்டின் உள்ளூர் விலைகளை நிலைத்துறைத்ததில் ஒரு முறை மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. இருப்பினும், நீண்ட கால உள்நாட்டு விவசாய மேம்பாடு இன்றியமையாததாகும்.

2024 ஆம் ஆண்டில் இலங்கையில் அரிசிக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு பல அடிப்படைக்காரணங்களால் உருவாகியுள்ளது. இது உள்நாட்டு விவசாயத்தில் ஏற்பட்ட சிக்கல்களையும் சர்வதேச சந்தை மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டது.

இலங்கை அரசின் உர இறக்குமதி தடைக்கு பின்னணியில், விவசாயிகள் போதுமான உரங்களைப் பெற முடியாததால் அரிசி உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டதுடன்

குறிப்பாக, உள்நாட்டு பாசனத் திட்டங்கள் போதிய அளவில் செயல்படாததால் உற்பத்தி மேலும் குறைந்தது

உர உற்பத்தியில் உள்ளூர் முன்னேற்றம். பாசனத் திட்டங்கள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கேற்ப விவசாயத்தை உகந்த முறையில் மாற்றுவது. மற்றும்சர்வதேச நிதி உதவிகளைப் பயன்படுத்தி உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் என்பன குறித்து யோசித்தால் நமது உணவு பாதுகாப்பை தொடர்ந்து உறுதிப்படுத்த முடியும்.

# யாழ்ப்பாணப் பொருளாதாரமும் புகையிலையும்



யாழ்ப்பாணப் பொருளாதாரத்தில் நீண்ட காலமாகவே புகையிலைப் பயிர்ச்செய்கை சிறப்பான இடத்தை வகித்து வருகின்றது. இது எப்பொழுது யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதுஎன்பது பற்றிய சரியான தகவல்கள் இல்லை. எனினும் சுதந்திர யாழ்ப்பாண அரசுக் காலத்தின் இறுதிக்கட்டத்திலேயே அறிமுகப் படுத்தப்பட்டு இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எனினும் 17 ஆம் நூற்றாண்டின்தொடக்கத்தில், போத்துக்கீசர்காலத்திலேயே உறுதியாக வேரூன்றியிருக்கக் கூடும். எப்படியாயினும், இது யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்துடன் சுமார் 400 ஆண்டு காலம் இணைந்துள்ளது எனலாம். பிற்காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட, உருளைக்கிழங்கு உற்பத்தி, திராட்சை உற்பத்தி போன்ற பெருமளவு வருமானம் அளித்த, விவசாயம்சார்ந்த நடவடிக்கைகள் குறுகிய காலத்துக்கு உள்ளாகவேகைவிடப்படவேண்டி ஏற்பட்ட போதிலும், புகையிலைச் செய்கை இன்றுவரை நிலைத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் ஆகும்.

யாழ்ப்பாணத்தின் இணுவில் பகுதியில் உள்ள புகையிலைத் தோட்டம் ஒன்று. அறுவடை செய்யப்பட்ட புகையிலைச் செடியின் இலைகள் பதப்படுத்துவதற்காக மதில்களின் மீது உலரவிடப்பட்டுள்ள காட்சி.

புகையிலைப் பயிர்ச் செய்கையின் அறிமுகம், யாழ்ப்பாணப்பொருளாதாரத்தைப் பொறுத்தவரை ஒரு விரும்பத்தக்க அம்சமாக விளங்கியது எனலாம். யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசுகளுக்குக் குறிப்பிடத்தக்க வருவாயை அளித்து வந்த நடவடிக்கைகளான, முத்துக்குளிப்பு, யானைஏற்றுமதி, சாயவேர் ஏற்றுமதி போலன்றி புகையிலைச் செய்கையானது, மக்கள்மட்டத்தில் பரவலான பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. புகையிலை ஒரு விவசாய உற்பத்திப் பொருளாக மட்டுமன்றி, உள்ளூரிலேயே உருவாக்கப்படக்கூடியதாக இருந்த சுருட்டுக் கைத்தொழில்களுக்கு மூலப் பொருளாகவும் அமைந்தது. இது தொடர்பான வணிக முயற்சிகளிலும் மக்களில் ஒரு பகுதியினர் வருமானம் பெறக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே இலங்கையின் தென் பகுதிகளுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் கேரளப் பகுதிகளுக்கும், இந்தோனீசியாவில் இன்று ஜக்கார்த்தா என்று அழைக்கப்படும் பத்தேவியாவுக்கும், புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. மக்களின்பொருளாதார நிலையைப் பரவலாக உயர்த்தியது மட்டுமன்றி, அரசாங்கமும் வரிகள் மூலம் குறிப்பிடத்தக்க வருமானம் பெற்றது.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலா துறையின் வகிப்பாகம் என்ன?

**பிரணவன்**

**பதில் -** இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையினது முக்கிய பங்குகள் பின்வருமாறு உள்ளன ,சுற்றுலாத்துறை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. COVID-19 ஐத்தொடர்ந்து ஏற்பட்ட சிக்கல்களையும் மீறி, 2023-2024க்குப் பின்னர் இத்துறை மீண்டும் வளர்ச்சியடைந்து வருகிறது. சுற்றுலாத் துறையின் வளர்ச்சியால் நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்புகள் அதிகரிக்கின்றன.

சுற்றுலாத் துறை நேரடியாகவும் மறை முகமாகவும் இலங்கையில் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது , நாட்டின் பிராந்திய வளர்ச்சிக்கு சுற்றுலாத் துறை முக்கிய பங்களிப்பை அளிக்கிறது, குறிப்பாக, கிழக்கு மற்றும் தெற்கு பிரதேசங்கள் புலம்பெயர் சுற்றுலாப் பகுதியாக அதிகம் பயன்படுகின்றன.

உலகளாவிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இலங்கையின் இயற்கை அழகுகள், கலாச்சாரம், மற்றும் வரலாற்றுப் புகழ்கள் நாட்டின் சர்வதேச வர்த்தக வருமானத்துக்கு முக்கிய ஆதாரமாக உள்ளன. ஆனாலும்

அரசியல் நிலைத்தன்மை இல்லாமல் இருந்தால் சுற்றுலாத்துறையின் மேம்பாடு சிக்கலாகும். இலங்கை, அதன் சுற்றுலாத் துறையை உரிய வகையில் மேம்படுத்தினால், அது பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய வழியாய் மாறும்.

**கேள்வி -**மாகாண சபை தேர்தலில் 2024 ஆம் ஆண்டு மாற்றங்கள் ஏதாவது இந்த வருடம் உள்ளூர் ஆட்சி சபை தேர்தலில் இந்த இந்த வருடம் உள்ளூர் ஆட்சி சபை தேர்தலில் மாற்றங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? உள்ளூர் ஆட்சி சபை தேர்தலில் மாற்றங்கள் வர வாய்ப்பு இருக்கிறதா?

**பதில் -**உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசியல்களத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தேர்தல்களுக்கான திகதி இன்னும் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படாத நிலையில், தேர்தல்கள் தாமதம் காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் மாகாண சபைகள் இயங்காததால், அவற்றை நடத்துவதற்கு உள்நாட்டு குழுக்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் அழுத்தம் காரணமாக நாடு உள்ளது. இந்த தாமதங்கள் அதிகாரப் பகிர்வு மற்றும் நிர்வாகத்தைப் பற்றிய கவலைகளை எழுப்பியுள்ளன, குறிப்பாக தனித்துவமான உள்ளூர் தேவைகளைக் கொண்ட பிராந்தியங்களில்.

முக்கிய சாத்தியமான மாற்றங்களில் புதிய அரசியல் கூட்டணிகளின் ஈடுபாடு மற்றும் ஐஆகு திட்டத்துடன் பிணைக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் போன்ற சமீபத்திய தேசிய முன்னேற்றங்களின் சாத்தியமான தாக்கம் ஆகியவை அடங்கும். கூடுதலாக, 2024 நாடாளுமன்றத் தேர்தலில், வரலாற்றில் பெண்கள் அதிகப் பிரதிநிதித்துவத்தை அடைந்து சாதனை படைத்ததைக் கொண்டு, பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிப்பதற்கு இந்தத் தேர்தல்கள் சாட்சியாக இருக்கலாம்.

இந்தத் தேர்தல்கள் திறமையாக நடத்தப்பட்டால், அவை உள்ளூராட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தவும், விளிம்புநிலைக் குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கவும் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்தவும் முடியும், இது இலங்கையில் நெருக்கடிக்குப் பிந்தைய மீட்சிக்கு முக்கியமானது

**மதியழகன்**
**யாழ்ப்பாணம்**

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

தமிழர் பொருண்மியம் வாரமலர்
TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
24.11.2024

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

இண்டைக்கு வீட்டம்மா பிரதோசம் எல்லே மத்தியானம் கறி வைக்கிறதுக்கு கடைக்குப் போய் மரக்கறி ஏதும் வாங்கிக்கொண்டு வருவம் எண்டில்லை உந்தக் கண்டறியாத போனை விடியக்காலமையே தடவிக்கொண்டு இருக்கிறியள் எண்டபடியே தேத்தண்ணிப் பேணியை டொக்கெண்டு பக்கத்தில கிடந்த ரீப்போல வைச்சா. வீட்டம்மா தேத்தண்ணிப் பேணியை டொக்கெண்டு வைச்சா எண்டா கெதியாக் குடிச்சுப்போட்டு மினக்கெடாம மாறெண்டு அர்த்தம். உந்த சைன் லாங்குவிஜ் விளக்கம் கன வீட்டு ஆம்பிளையளுக்குப் பத்தாது. அதாலதான் அவை தேவையில்லாமல் வாங்கிக்கட்டிறவை.

நானும் சுட்டாலும் பரவாயில்லை எண்டு மடக்மடக்கெண்டு குடிச்சன். இல்லாட்டில் அதுக்கும் பிறகு என்ன மளமள வெண்டு குடிக்காம மசமச வெண்டு ஏமிளாந்திக் கொண்டு நிக்கிறியள் எண்டு பேச்சு வாங்கும். பையை எடுத்துக் கொண்டு வெள்ளவத்தைப் பக்கமாப் போனன். அங்கதான் நல்ல மரக்கறி இருக்கும் எண்டது மற்றப்பெண்டுகள்மாதிரி வீட்டம்மான்ரை அபிப்பிராயம். வெள்ளவத்தையில மரக்கறி விக்கிறவங்களுக்கும் உந்த சூக்குமம் விளங்கும்.

கலியாண வீடுகளுக்கு பொம்பிளைக்கு மேக்கப்போடேக்கை வீட்டில நிக்கிற வயதுபோன பெண்டுகளுக்கும் முக்கியமா பொம்பிளையின்ரை அம்மாக்கு ஆச்சிக்கு அதை இதைப்பூசி விடுற மாதிரி அவங்கள் பழைய வாடின மரக்கறி எல்லாம் வடிவா ஈரச்சீலை போட்டுத்துடைச்சு வைப்பாங்கள். தூர நிண்டு பாத்தா அப்பதான் பியூட்டி பார்லரில போய் பிளீச்சிங் செய்து போட்டு வந்த மாதிரி கொஞ்சம் உந்தக் காய்கறியள் நல்ல மினு மினுவெண்டு இருக்கும். நான் கடை கடையா ஏறி இறங்கி விலையளைப் பார்த்துக்கொண்டு வந்தன். என்னை ஆக்கள் கொஞ்சம் இளக்காரமாப் பாத்தவை. ஆக்கள் மட்டுமே கடைக்காறனுக்கும் என்னைக்கண்டா விலை விசாரிக்கின்றன் எண்டு சரியான இளக்காரம் .

இப்பிடி ஒரு கடையில நான் வாய்பாத்துக் கொண்டு நிக்க , போற போற இடத்தில வாய்பாத்துக் கொண்டு நிக்காம சட்டுப்பட்டெண்டு சாமான் வாங்கத்தெரியாது எண்டு எங்கட வீட்டம்மா நெடுக எனக்குச் சொல்லுற வசனம் ஞபகத்துக்கு வந்தது . அப்பேக்கை ஒரு அன்ரி ஓட்டோல வந்திறங்கினா அவ அந்தக் கடையில இருந்து கொஞ்சத் தூரத்திலை உள்ள ஒரு அப்பாற்மென்றிலதான் இருக்கிறா. மல்லி கத்தரி பஞ்சியாய் வெண்டி பஞ்சியாய் வெங்காயம் பஞ்சியாய் எண்டுபோட்டு போனில ஆரோடையோ நேரில கதைக்கிறமாதிரியே சத்தமாப் பஞ்சியில்லாமல் கதைச்சுக்கொண்டு நிக்க அவன் பஞ்சியப்படாம நிறுத்தது பாதி நிறுக்காதது பாதியா ஒரு பாக்கில போட்டு குடுக்க அவனிட்டை ஒரு ஆயிரம் ரூபாயைக் குடுத்தா .

அவன் குடுத்த மிச்சக்காசை பஞ்சியில எண்ணிப்பாக்காமலே கான்ட்பாக்கில போட்டுப்போட்டு ஓட்டோல ஏறினா. அவவின்ரை பிள்ளையள் வெளிநாடுவழியை இருப்பினம் எண்டு நினைக்கிறன். கடைக்காறன் என்னை ரெண்டாந்தரமும் அன்னதானமடத்தில சாப்பிடப் போன ஆளை மடக்காறர் இளக்காரமாப் பாத்தமாதிரி ஒரு பார்வை பாத்தான். எனக்கெண்டா அதைப்பாத்து வெக்கம் வரவேயில்லை. எங்கட வீட்டம்மாவும் நெடுகவும் வெக்கங்கெட்ட மனுசன் போற போற இடமெல்லாம் விடுப்பு விண்ணாயம் பார்த்துக்கொண்டு திரியும் எண்டு சொல்லுறதைக் கேட்டுப் பழகிப்போச்சு.

உண்ணாண எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்லை. விலை கேட்டுச்சாமான் வாங்கிறது நாகரீகக் குறைவே. இல்லாட்டில் கடைக்காறன் சாமான் நிறுக்கேக்கை எட்டிப்பாக்கிறது நாகரீகக் குறைவே .இல்லாட்டில் மிச்சக்காசை எண்ணி வாங்கிறது நாகரீகக் குறைவே. இல்லாட்டில் கையில தூக்கக்கூடிய சாமானைக் காவிக் கொண்டு நடக்கக்கூடிய தூரத்தை நடந்து போறது நாகரீகக் குறைவே. எங்கட ஆச்சி விலை கேட்டு சாமான் வாங்க வெக்கப் படக் கூடாது எண்டு நெடுகவும் சொல்லிறவ .உதை விடுங்கோவன் .இன்னும் சிலரில ஒரு பழக்கம் இருக்கு நடைபாதையில விலை குறைவாக நல்ல தரமான சாமான் இருந்தாலும் வெக்கம் எண்டு நாகரீகக் குறைவு எண்டு வாங்காமப் போய் அதே சாமானை சுப்பர் மார்க்கற்றில விலை கூடக்குடுத்து வாங்குவினம். கேட்டா பேவ்மென்றில கிறடிற்காட் பாவிக்கேலாதெல்லே எண்டு பகிடி விடுவினம். உதில பகிடி என்னண்டால் விலையும் கூடக்குடுப்பினம் பிறகு காட்டுக்கு வட்டியும் கட்டுவினம்.

நான் விலை கேக்கிறதுக்கோ இல்லாட்டில் பேவ்மென்றில நல்ல சாமான் இருந்தால் வாங்கிறதுக்கோ ஒருநாளும் பின்வாங்கிறதில்லை. காக்கிள்சுக்குப் போனாலும் விலை கேப்பன். உதால என்ர வீட்டம்மா சாமான் வாங்க என்னோட வாறதுக்கு சங்கடப்படுவா. சிலர் உதால விலை கேட்டுத் திரியிறதால என்னை கசவாரம் கஞ்சன் ஈச்சப்பி உவங்கட ஊர்க்காரர் எல்லாம் உப்பிடித்தான் எண்டுவினம். கஸ்ரப்பட்டு உழைக்கிற காசைக்கண்டவனுக்கும் விட்டெறிஞ்சா அதுக்காக என்னைக் கசவாரம் எண்டு சொன்னா நாகரீகம் தெரியாதவன் எண்டு சொன்னா நான் கவலைப்பட மாட்டன். ஏனெண்டால் உழைப்பின்ரை வலி அப்பிடி.

தமிழர் பொருண்மியம்
வாரமலர் TAMILS ECONOMY

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில்திடீரெனப்புகுந்தது தன்னலம். விவசாயி அதிகவிலைக்கு நெல்லை விற்க முடிவு செய்தான் களப்பிச்சை கொடுப்பதை எல்லோரும் விரும்பவில்லை கூலி செய்பவனுக்கு பணமே கூலியானது. விளையும் பொருட்களை தனது தேவைக்குக்கூட இல்லாமல் விற்று பணமாக்கினார்கள். இதனால் மறு போக விதைப்புக்கு வியாபாரிகளை நாடினார்கள்.**

# எங்கட வாழ்வியல்

## பார்வை 15



தமிழ்க்கவி



எந்த தொழில் செய்தாலும் அதில் சேதாரம் வரத்தான் செய்யும். ஆக நகைக்கடைக்காரர் மட்டும்தமக்கான சேதாரத்தை நுகர்வோரிடம் செலுத்திவிட முடிகிறது. மக்கள் பசிபட்டினி கிடந்து விவசாயம் செய்த போது, தமது பொருட்களை விற்பனை செய்ய சந்தைக்கு கொண்டு போனால் அங்கே எப்படியும் இரண்டு முதல் அதற்கும் அதிக அளவில் முடிந்தவரை சேதாரமாக்கும் மொத்த வியாபாரிகள் அதிகம்.

எனக்குத் தெரிந்து நெல் வாங்கிம் ஒரு மொத்த வியாபாரியிடம் வேலைசெய்யும் அந்த நிறுவனத்தின் காவற்காரன் மாலையிலும் காலையிலும் அந்த நெல் அளக்கும்இடத்தை கூட்டித்துப்பரவு செய்வான் தினமும் அவன் கல் தூசு மண் இவற்றுடன் கலந்து அள்ளும் அந்த குப்பையை வீட்டில் கொண்டு போய் கொடுப்பான்.

அவனுடைய மனைவி அதை சுளகில் போட்டு புடைத்து, தாத்தி, கொழித்து, கழிவுகளை நீக்கி எடுப்பது, அளக்கும் போது கொட்டிய சிதறிய நெல்மணிகள். அவர் தினசரி ஆறேழு கிலோ நெல்லை அப்படி சேர்ப்பார் மாதம் நூற்றி எண்பது கிலோ நெல் அதாவது ஏறக்குறைய மூன்று மூடை நெல். இந்த நெல் அமோகமாக அளப்பது சுமார் இரண்டு மூன்று மாதங்கள்தான். என்றாலும் வருடம் முழுதுக்குமான உணவுக்கான நெல் அவர்களுக்கு கிடைக்கும். அதே மாதிரி உழுந்து பயறு என்பனவும் கிடைக்கும்.

இந்த கதை எமக்கு புதிதுதான். என் தந்தை பத்து ஏக்கருக்கு மேல் நெல் செய்கை பண்ணுவார். ஆனால் வரப்பில் நடந்து செல்லும் போது வரப்பில் சாயும் நெற் கதிர்களை காலில் மிதிபடாதவாறு ஓதுக்கிவிடுவதை முக்கிய பணியாக செய்வார். அது நடைவரம்பிற்கு மட்டும்தான். ஏனைய உள் வரம்புகளில் நெல் தலைசாய்ந்து படுத்திருக்கும் அழகை இன்றைய பிள்ளைகள் காண்பதில்லை. காரணம் நெல் விழுவது மிகக் குறைவு.

வலிமையான தண்டுகளை உடைய நெல்வர்க்கமே இன்றுள்ளது. எந்த வகை ஆனாலும் நடந்து செல்லும் போது ஒரு நெற்கதிர் கீழே இருந்தாலும் என்தந்தை குனிந்து அதை எடுத்து கூட்டமான நெல்லுடன் சேர்ப்பார். அதைவிட அறுவடை முடித்து நெல் கதிர் கட்டப்பட்டு வெளியே எடுத்தபின் அந்த வயலில் கதிர் பொறுக்கும் சிறுவர்களும் முதியவர்கள் பரவலாக திரிந்து கதிர் பொறுக்குவார்கள். அவர்களும் கூட ஒரு போகத்தில் கணிசமான நெல்லை கதிர் பொறுக்கியும் களப்பிச்சையாகவும் பெற்று தமது உணவுத் தேவையை சமாளிக்க முடிந்தது. (சூடடிக்கும் களத்தில் நெல் தூற்றி குவியலாக போட்டபின் ஏழை மக்கள் அந்தக்களத்திற்கு வெளியே நிற்பர் கமக்காரன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் குல்லத்தால் கோலி நெல் கொடுப்பான.

இதுதான் களப்பிச்சை) கொடுத்தபின், கோவிலுக்கு நெல் எடுத்து வைப்பான். கூலி வேலை செய்தவர்களுக்கும் கூட நெல்தான்' கூலி. அதன்பின்தான்



மீதமுள்ள நெல் மூடைகளில் கட்டி வீட்டிற்கு எடுத்துச் செல்வான். இதுவே எனது வாழ்க்கையிலேயே இளமையில் வறுமையை அனுபவித்தவள் நான் கதிர் பொறுக்கி அதைகசக்கி நெல்குத்தி பிள்ளைகளும் நானுமாக பசியாறிய பல நாட்கள் உண்டு. ஆக விளையும் ஒவ்வொரு விவசாயப் பொருளும் கிராமம் முழுவதும் பயன்படுத்திய காலம் ஒன்றிருந்தது.

சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் திடீரெனப்புகுந்தது தன்னலம். விவசாயி அதிகவிலைக்கு நெல்லை விற்க முடிவு செய்தான் களப்பிச்சை கொடுப்பதை எல்லோரும் விரும்பவில்லை கூலிசெய்பவனுக்கு பணமே கூலியானது. விளையும் பொருட்களை தனது தேவைக்குக்கூட இல்லாமல் விற்று பணமாக்கினார்கள். இதனால் மறு போக விதைப்புக்கு வியாபாரிகளை நாடினார்கள்.

அவர்கழூடாக புதியவகை நெல் வர்க்கங்கள் வயல்களில் இறங்கின. அமோக விளைச்சலைத்தரும் நெல்வர்க்கங்களை முதலில் ஐஆர்எட்டு, ஐஆர் ஆறு, பீஜீ லெவன் என இலக்கங்களில் நெல்லுக்கு பெயர் சூட்டினார்கள். அருமையான தமிழ் நெல் வர்க்கங்களான பச்சைப்பெருமாள் ஓலைவாலன் மொட்டைக்கறுப்பன், சீனட்டி, முருங்கைக்காயன். போன்ற காரணப் பெயர்கள் காணாமல் போயின. நெல்லை வெட்டி அதை காயவிட்டு சூடாக அடுக்கி காற்று வரும்வரை காத்திருந்து காற்றிலே தூற்றி நெல்லை அப்பழுக்கில்லாத முத்தாக வீட்டுக்கு கொண்டு போன காலம் மாறியது. காற்றுக்காலம்வரை சூடு வைத்து காத்திராமல் செயற்கையாக காற்றை வரவழைத்து நெல்லை தூற்ற முடிந்தது. அதனால் பெருங்காற்றில் நெல்மணிகளும் அடித்து செல்லப்பட்டாலும் அதன் விரைவு அதை பொருட்படுத்தவில்லை. வயலில் பச்சையாக கதிர்கள் கொட்டுண்டன. அது ஏழைகளின் வாழ்வாதாரமானது. அறுவடைக் குப்பின்னும் வயல்களில் நடமாடிய மக்கள் அறுவடை முடிந்தபின் அடுத்த போகத்திற்கே வயலைப்பார்க்க முடிந்தது.

வயல் வெளிகளில் வரையறையின்றி மேய்ந்த கால்நடைகள் காணாமல் போயின. ஆதலால் கால்நடைகளை நம்பி மேச்சலுக்கு அனுப்பமுடியவில்லை. வயல்களில் நான்காண அடர்ந்து படந்திருந்த எருக்கஞ் செடிகள் இப்போது குறைந்து போயின. பணம் அனைத்தையும் கட்டிப்போடத் தொடங்கியதால் கல்வி என்பதும், உழைப்பு என்பதும் வாழ்க்கை என்பதும் அதற்கான தேடலாகவே அமைந்தது. விளைவு எமது செல்வம் விளைந்த எமது வளம். எங்கள் கைகளிலிருந்து தாறுமாறாக சிதறத் தொடங்கிவிட்டது. முப்பது வருடங்களுக்கு முன் இருபத்தைந்து மூடை விளைந்த நிலத்தில் இப்போது நாற்பது மூடை நெல்லை விளைவிக்க முடியும், ஆனால் அந்த நாற்பது மூடை நெல்லும் வீட்டுக்கு வருகிறதா? ஒரு கடையின் வாசலில் கொட்டும் நெல் என்னவாயிற்று என்று பார்த்தோம். ஆனால் இப்போது வயலில் விளைந்ததையே நாம் பெரும்பகுதியை வயலிலேயே கொட்டிவிட்டு வருகிறோம். அது யாருக்கும் உதவுவதில்லை. அறுவடை முடித்த வயலில் இருமாதங்களின் பின் போய்ப்பார்த்தால் நெல் விதைத்தது போலல்ல நாற்றுப் போட்டது போல அவ்வளவு அடர்த்தியாக முளைத்திருப்பதை காணலாம். நீங்கள் பேருந்துகளில் பயணம் செய்யும் போது இதை அவதானித்திருக்கலாம். இந்த சேதாரம் விவசாயிக்கும் கிடையாது. நுகர்வோனுக்கும் கிடையாது. தானதர்மமாகவும் மாறாது. வெறுமனே நிலத்தில் கொட்டியதாகத்தான் உள்ளது. ஆனாலும் இந்த சேதாரம் பற்றியாரும் கவலைப்படுவதில்லை. ‘அது வெட்டுமிசினில வெட்டினா அப்பிடித்தான்.’

யானையின் வாயிலிருந்து தவறிவிழும் ஒரு கவளம் உணவு, பல்லாயிரம் எறும்புகளுக்கு தீனியாகும் என்று சொல்லப்படுகிறது. இதே போல எமது கைகளால் நாம் தவற விடும் அதீதமான உணவுப்பண்டங்கள் மிக அதிகம். கொழும்பில் ஒரு பெரிய உணவகம் ஒன்றில் போட்டிருந்த ஒரு உணவு மேசையை சுற்றி நால்வர் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்பாக மேசை நிறைய தட்டுகளில் வித விதமான உணவுகள் கறிகள் என விரவிக்கிடந்தது. நால்வருமாக இப்போதல்ல, இன்று முழுதும் உட்கார்ந்து சாப்பிட்டாலும் அதை முடிக்க அவர்களால் இயலாது. போதாதற்கு இரண்டு கொக்கோகோலா போத்தல்களும் இருந்தன. ஆனால் எனது மேசையருகே வந்த பரிசாரகன் என்னிடம் கூறிய வார்த்தைகள் என்னைக் கவர்ந்தன. அளவாக வாங்குங்கள் கேட்க கேட்க தருவோம். நீங்கள் மீதம் வைக்கும் உணவுக்காக ஏன் பணம் செலுத்தவேண்டும், அது பலருக்கு உதவலாம் அல்லவா? நான் கேட்டது ஒரு “பிரைட்ரைஸ்”இவன் ஏன் இப்படி சொல்கிறான். என நான் திகைக்க அவன் சொன்னான் ‘ஒரு பிரைட்ரைஸ் உங்களால் உண்ண முடியாது. அரை என்று கேளுங்கள்’ என்று. நான் அப்படியே செய்து முழுமையான பசியை போக்கினேன். பணமும் மிச்சம். சேதாரங்கள் பற்றி இன்னும் பார்க்கலாம்.

# இலங்கையர்கள் ஏன் வரி செலுத்தத் தயங்குகிறார்கள்?




நிதிக் கொள்கை, அரசாங்க வருவாய் மற்றும் வரி இணக்கம் ஆகியவற்றில் உள்ள சவால்களால் குறிக்கப்பட்ட தனித்துவமான பொருளாதார நிலப்பரப்பை இலங்கை எதிர்கொள்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில், இலங்கையர்கள் வரி செலுத்தத் தயங்குவது ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக இருப்பதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முடக்குகின்றது. இந்தக் கட்டுரையானது வரி ஏய்ப்பின் பின்னணியில் உள்ள முக்கிய காரணங்களை ஆராய்வதோடு, கடந்த கால வரலாற்று நிகழ்வுகள் முதல் இன்றைய சமூக-பொருளாதார நிலைமைகள் வரை, வரி இணக்கத்தை மேம்படுத்துவதற்கான வழிகளையும் பரிந்துரைப்பதாக அமைகின்றது.

### 1. அரசாங்கத்தின் மீது வரலாற்று அவநம்பிக்கை

இலங்கையில் வரி ஏய்ப்புக்கான முதன்மையான காரணம் அரசாங்கத்தின் மீது ஆழமான நம்பிக்கையின்மை. பல தசாப்தங்களாக, குடிமக்கள் வரி முறையின் செயல்திறனைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். அவர்களின் பங்களிப்புகள் வெளிப்படையாக/திறமையாக பயன்படுத்தப்படவில்லை என்று நம்புகிறார்கள். ஊழல், வீண் செலவுகள், மற்றும் அரசியல் ஸ்திரமின்மை போன்றவற்றால் இந்த உணர்வு தீவிரமடைந்துள்ளது. அத்தகைய சூழலில், வரி செலுத்துவதை பலரும் ஒரு பயனற்ற செயலாக உணர்கின்றனர். மேலும் நாட்டினுடைய நிதிப் பொறுப்புகளில் இருந்து அவர்களை அந்நியப்படுத்துகின்றது.

எடுத்துக்காட்டாக, உட்கட்டமைப்புத் திட்டங்களில் பொதுமக்களின் அதிருப்தி, பெரும்பாலும் அதிக விலை அல்லது மோசமாக செயல்படுத்தப்படுவதால் வரிகள் நல்ல பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படவில்லை என்ற எண்ணத்தை வலுப்படுத்துகின்றது. நம்பிக்கையின் இந்தச் சிதைவுமக்கள் வீணாகக் கருதும் பொருளுக்குப் பங்களிப்பதை விட வரி ஏய்ப்பு செய்யும் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளது.

### 2. உயர் முறைசாரா பொருளாதாரம்

இலங்கையின் முறைசாரா பொருளாதாரம் வரிக்கு இணங்காததில் கணிசமான பங்கை வகிக்கின்றது. மதிப்பீடுகளின்படி, கிட்டத்தட்ட 60% தொழிலாளர்கள்,விவசாயம், சிறிய அளவிலான வர்த்தகம் மற்றும் சேவைகள் உள்ளிட்ட முறைசாரா துறைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த இடத்தில் பல வணிகங்கள் முறையான ஆவணங்கள் அல்லது பதிவு இல்லாமல்செயல்படுவதால்வரி விதிகளை அமல்படுத்துவது அரசாங்கத்திற்கு கடினமாக உள்ளது. சாராம்சத்தில், வரி இணக்கம் குறைவாக உள்ளது.ஏனெனில் பொருளாதாரத்தின் கணிசமான பகுதி முறையான வரிவிதிப்பு கட்டமைப்பிற்கு வெளியே உள்ளது.

மேலும், முறைசாரா வணிகங்கள் வருமானத்தை குறைத்து மதிப்பிடுவது அல்லது வரி செலுத்துவதை முழுவதுமாகத் தவிர்ப்பது எளிதாக இருக்கும். பலவீனமான அமுலாக்க வழிமுறைகளுடன், இந்த வணிகங்கள் அதிக நெகிழ்வுத்தன்மையை அனுபவிக்கின்றன. வரி ஏய்ப்புக்கான பரந்த கலாச்சாரத்திற்கு பங்களிக்கின்றன.

### 3. சிக்கலான வரி அமைப்பு

இலங்கையில் வரிவிதிப்பு முறை மிகவும் சிக்கலானது மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாதது என அடிக்கடி விமர்சிக்கப்படுகின்றது. தனிப்பட்ட வருமான வரிகளிலிருந்து VAT, கார்ப்பரேட் வரி மற்றும் பிற வரிகள் வரையிலான பல்வேறு வரிகளை செலுத்துவதற்கு உயர் அளவிலான நிபுணத்துவம் தேவைப்படுகிறது. இது சிறிய மற்றும்நடுத்தர



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

நிறுவனங்களுக்கு (SMEs) பெரும்பாலும் இல்லை. இந்த சிக்கலானது ஒரு தடுப்பாக செயல்படுகிறது. இணங்குவதற்குப் பதிலாக வரிகளைத் தவிர்க்க மக்களைத் தள்ளுகின்றது.

மேலும், பல ஆண்டுகளாக சீரற்ற வரிக் கொள்கைகள், வரி விகிதங்களில் திடீர் மாற்றங்கள் மற்றும் விலக்குகள் ஆகியவை குழப்பத்தை உருவாக்கியுள்ளன. வரி விதிப்பில் கணிக்க முடியாதது வரி செலுத்துவோர் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துகின்றது.

### 4. வரி தொடர்பான அறிவு மற்றும் விழிப்புணர்வு இல்லாமை

வரிகளின் முக்கியத்துவம் மற்றும் தேசிய வளர்ச்சியில் அவற்றின் பங்கு பற்றிய கல்வியின்பற்றாக்குறை மற்றொரு அடிப்படை பிரச்சினையாகும். மக்கள்தொகையில் கணிசமான பகுதியினருக்கு சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சமூக நலத் திட்டங்கள் போன்ற முக்கியமான பொதுச் சேவைகளுக்கு வரி எவ்வாறு நிதியளிக்கின்றது என்பது பற்றித் தெரியாது. இந்த அறிவு இல்லாததால், தனிநபர்கள் தங்கள் பங்களிப்பை உறுதியான பலன்களுடன் இணைக்கத் தவறுவதால், வரி தவிர்ப்பை நியாயப்படுத்துவதை எளிதாக்குகின்றது.

எடுத்துக்காட்டாக, வருமான வரியின்

முற்போக்கான தன்மையை பலர் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. வரிகள் நியாயமற்ற முறையில் சுமையாக இருப்பதாக நம்புகிறார்கள். (குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு). இந்த தவறான கருத்து அமைப்பு மீது மேலும் வெறுப்பை வளர்க்கின்றது.

### 5. பொருளாதாரக் கஷ்டங்கள்

சமீப ஆண்டுகளில் பணவீக்கம், தேங்கி நிற்கும் ஊதியங்கள்(ஊதியப் பற்றாக்குறை), மற்றும் உயர் வாழ்க்கைச் செலவுகள் உட்பட பல பொருளாதாரச் சவால்களுடன் இலங்கை போராடி வருகின்றது. இந்தக் கஷ்டங்கள் பல குடிமக்களுக்கும் வணிகங்களுக்கும் தங்கள் வரிக் கடமைகளைச் சந்திப்பதை கடினமாக்கியுள்ளன. மக்கள் அன்றாட வாழ்க்கைக்கு போராடும்போது, வரி செலுத்துவது கூடுதல் நிதிச்சுமையாகவே பார்க்கப்படுகின்றது.

பொருளாதாரச் சிக்கல்களின்போது வரி செலுத்துவோர் நீண்டகால தேசியப் பொறுப்புகளைவிட உடனடிஉயிர்வாழ்வதற்கு முன்னுரிமை அளிக்கலாம். மேலும் வரி விதிகளுக்கு இணங்காததைத் தூண்டும். இது குறிப்பாக SME கள் மற்றும் குறைந்த வருமானம்கொண்ட குடும்பங்கள் மத்தியில் தெளிவாகத் தெரிகின்றது. அவர்கள் பொருளாதார உறுதியற்ற தன்மையை எதிர்கொள்கின்றனர்.

### 6. வரி விதிப்பில் அநியாயம் பற்றிய கருத்து

பல இலங்கையர்கள் வரி விதிப்பு முறையை அநீதியானதாக உணர்கிறார்கள். குறிப்பாக வரிச் சுமைகளின் சமமற்ற விநியோகம் வரும்போது. பணக்காரர்களும் சக்திவாய்ந்தவர்களும் வரிக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லதுசட்டத்துக்கு புறம்பான முன்னுரிமையை பெறலாம்என்ற பரவலான நம்பிக்கை உள்ளது, அதே சமயம் நடுத்தர மற்றும் கீழ் வகுப்பினர் வரிச்சுமையின் விகிதாசாரப் பங்கைக் கொண்டுள்ளனர். சமத்துவமின்மை பற்றிய இந்த கருத்து வெறுப்பைத் தூண்டுகின்றது மற்றும் வரி விதிமுறைகளுக்கு இணங்க அதிக தயக்கத்திற்கு வழிவகுக்கின்றது.

### 7. வரி வசூல் வழிமுறைகள்

பலவீனமான அமுலாக்கப் பொறிமுறைகள் மற்றும் வரி ஏய்ப்புக்கான போதுமான அபராதங்கள் காணப்படாமை ஆகியவற்றுடன், இலங்கையின் வரிவசூல் செயல்முறையானது வரலாற்று ரீதியாக திறமையற்றதாக உள்ளது. வரி செலுத்த வேண்டிய நிலையிலும், அவற்றை திறம்பட வசூலிக்க அரசு போராடி வருகிறது. இந்த அமுலாக்கக் குறைபாடு, வரி ஏய்ப்பு ஒப்பீட்டளவில் ஆபத்து இல்லாத சூழலை உருவாக்குகின்றது. மேலும் சிக்கலைத் தொடரச் செய்கின்றது.




வரிவசூல் செயல் முறையை நவீனமயமாக்கும் வகையில் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் முன்னேற்றம் மெதுவாகவே உள்ளது. நிர்வாக மற்றும் நீதித்துறை அமைப்புகளில் உள்ள திறமையின்மை, வரி அதிகாரிகளின் நம்பகத்தன்மையை குறைத்து, பரவலான இணக்கமின்மைக்கு வழிவகுக்கின்றது.

### என்ன செய்ய முடியும்?

சவால்கள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தாலும்இலங்கையில்வரி இணக்கத்தை மேம்படுத்துவதற்குநடவடிக்கை எடுக்கக்கூடிய தீர்வுகள் உள்ளன. உதவக்கூடிய சில உத்திகள் பற்றி இப்பொழுது நாம் பார்ப்போம்:

1) வரிக் கல்வியை வலுப்படுத்துதல்: வரி செலுத்துவதன் நன்மைகள் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அவர்கள் எவ்வாறு பங்களிக்கிறார்கள் என்பதைப் பற்றி குடிமக்களுக்குக் கற்பிக்க பொது பிரச்சாரங்கள் தொடங்கப்பட வேண்டும். இது, வரி விழிப்புணர்வு மற்றும் பொறுப்புணர்வு கலாச்சாரத்தை உருவாக்க முடியும்.

2) வரி முறையை எளிமையாக்குதல்: குறைவான சிக்கல்களைக் கொண்ட மிகவும் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் வெளிப்படையான வரி முறை இணக்கத்தை ஊக்குவிக்கும். அதிகாரத்துவ கெடுபிடிகள் மற்றும் நடைமுறைகளைக் குறைப்பது மற்றும் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்குவது தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு செயல்முறையை எளிதாக்கும்.

3) வெளிப்படைத்தன்மை மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்: வரிகள் திறம்பட மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும். வரி வருவாய் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பது குறித்த வழக்கமான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலமும், வரிகள் மூலம் நிதியளிக்கப்பட்ட வெற்றிகரமான பொதுத் திட்டங்களைக் காண்பிப்பதன் மூலமும் இதைச் செய்யலாம்.

4) நவீனமயமாக்கல் அமுலாக்க வழிமுறைகள்: டிஜிட்டல் வரி வசூல் தளங்களின் அறிமுகம் மற்றும் பல்வேறு அரசு துறைகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு ஆகியவை வரி ஏய்ப்பைக் குறைக்க உதவும். வலுவான தண்டனைகள் மற்றும் தொடர் தேர்ச்சியான சிறந்ததணிக்கைகள் இணங்காததற்கு தடையாக செயல்படலாம்.

5) முறைசாரா பொருளாதாரத்தை குறிவைத்தல்:பொருளாதாரத்தின் பல துறைகளை முறைப்படுத்த அரசாங்கம் வேலை செய்ய வேண்டும். சட்ட கட்டமைப்பிற்கு வெளியே செயல்படும் வணிகங்களை எளிதாகக் கண்காணித்து வரி விதிக்கும் முறையினை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

எந்தவொரு தேசத்தின் நிலையான வளர்ச்சிக்கும் வரி இணக்கம் அவசியம். இலங்கையைப் பொறுத்தவரை வரி வசூலிப்பதில் உள்ள தடைகளை கடப்பதற்கு கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்களின் பார்வையில் மாற்றம் போன்ற இரண்டும் தேவை. அவநம்பிக்கை, சிக்கலான தன்மை மற்றும் சமத்துவமின்மை ஆகியவற்றின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம்மேலும்திறமையானவழிமுறைகளை செயல்படுத்துவதன் மூலம் நாட்டின் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் வரி பொறுப்பு கலாச்சாரத்தை அரசாங்கம் வளர்க்க முடியும். இலங்கையில் நிதிப் பொறுப்பை மேம்படுத்துவது தொடர்பான தேசிய உரையாடலுக்கு இந்தக் கட்டுரை சரியான நேரத்தில் பங்களிப்பாக அமையும். வரி இணக்கமின்மைக்கான அடிப்படைக் காரணங்களை இது எடுத்துக்காட்டுகிறது. மேலும் வளமான எதிர்காலத்தை நோக்கி கொள்கை வகுப்பாளர்களுக்கும் பொதுப் பணிகளுக்கும் உதவும் நடைமுறை தீர்வுகளை வழங்குகின்றது.

# மலையக பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

நவக்கிரி– மலையகம்

2024 ஆம் ஆண்டில் மலையக பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டால், அது பல காரணங்களால் வடிவமைக்கப்படும். குறிப்பாக, பல்துறை காரகங்கள், உள்ளூர் மற்றும் உலகளாவிய பொலிதி, சுற்றுச்சூழல் மாற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மற்றும் பொருளாதார கொள்கைகள் இதனை பாதிக்கக்கூடும்.

மலையக பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயம், தேயிலை மற்றும் காபி தொழில்கள், மற்றும் சுற்றுலா போன்ற துறைகளின் மீது பெரிதும் சாய்ந்து இருக்கிறது. இதைத் தாண்டி, தொழில் நுட்பத்தினை தழுவிய புதிய வாய்ப்புகள் மற்றும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான ஆதரவு வளர்ச்சியைத் தூண்டும் வாய்ப்பு உள்ளது.

1. விளைபொருள் விலை மாற்றங்கள்: தேயிலை மற்றும் காபி போன்ற விளைபொருள்களின் சர்வதேச சந்தை விலைகளின் ஏற்றத்தாழ்வு பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும்.

2. சுற்றுச்சூழல் மாற்றங்கள்: வளிமண்டல மாற்றங்கள் மற்றும் மழைமாறாட்டம் விவசாயத்தை பாதிக்கலாம்.

3. சுற்றுலா வளர்ச்சி: சர்வதேச மற்றும் உள்ளூர் சுற்றுலாவிற்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டால், மலையகத்தில் பணவரவு அதிகரிக்கும்.

4. தொழில்நுட்ப நவீனமயம்: விவசாயம் மற்றும் சிறு தொழில்களில் நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகமானால் உற்பத்தி திறன் உயரும்.

5. அரசின் கொள்கைகள்: பங்குதாரர்களுக்கான அனுகூலமான கொள்கைகள் உருவாக்கப்பட்டால், தொழில்நடத்தை மற்றும் வேளாண்மையில் முதலீடு அதிகரிக்கலாம்.

2024 இலங்கையின் புதிய அரசாங்கம் மலையக மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தது அரசின் முன்னுரிமைகள், பொருளாதாரச்சூழல், மற்றும் அப்பகுதியின் வளர்ச்சிக்கான திட்டங்களின் மீது அமைகிறது. மலையக மக்கள் சமூக-பொருளாதார ரீதியாக இந்திய வம்சாவளி தமிழ் சமூகமாக இருக்கின்றனர், அவர்கள் நீண்ட காலமாக வளங்களை அடைய முடியாமல் இருந்து வருகின்றனர்.

1. கல்வி

மலையகப் பகுதிகளில் பள்ளிகளின் வசதிகள், ஆசிரியர்களின் பற்றாக்குறை, மற்றும் உயர்கல்வி வாய்ப்புகளின் குறைபாடு உள்ளது.

● புதிய அரசாங்கம் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

2. சுகாதாரம்

மலையக மக்கள் தொடர்ந்து சுகாதார சேவைகளை அடையப் போராடுகின்றனர்.

● அரசு உயர் தர சுகாதார மையங்களை அமைத்து, இலவச சுகாதார சேவைகளை வழங்க முயற்சிக்க வேண்டும்.

3. வீடு மற்றும் குடியிருப்பு

பலர் இன்னும் அடிப்படை வசதிகள் இல்லாத தொழிலாளர் வீடுகளில் வசிக்கின்றனர்.

● புதிய குடியிருப்புத் திட்டங்கள் மூலம் நிலையான வீடுகளை வழங்குவது முக்கியம்.

4. வேலைவாய்ப்புகள்

தேயிலைத் தோட்டங்களில் நிலவிய குறைந்த சம்பளம் மற்றும் வேலைவாய்ப்பு பாதுகாப்பின்மையை கையாள அரசாங்கம் வேலைவாய்ப்புகளை துறைத்திறன் மேம்பாட்டுடன் ஒருங்கிணைத்தல்.

5. கண்ணியமான வாழ்வாதாரம்

மலையக மக்கள் பராமரிக்க வேண்டிய பொருளாதார வேறுபாடுகளை சமாளிக்கத் திட்டமிடப்பட்ட நிதி மற்றும் சமூகச் சலுகைகள் தேவை.

● புதிய அரசாங்கம் சர்வதேச உதவிகளைப் பயன்படுத்தி திட்டங்களை செயல்படுத்தினால் வளர்ச்சி சாத்தியமே.

● சமூக நலத்திட்டங்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகங்களின் ஊடாக மக்கள் வரை உதவி விரிவடைய வேண்டும்.

● அரசாங்கத்தின் மேற்பார்வை மற்றும் பொறுப்பான நிர்வாகம் தேவைப்படும்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் மலையக மக்களின், குறிப்பாக பெண்களுக்கும் ஆண்களுக்கும், அரசாங்கத்தால் வாய்ப்பு வழங்கப்படுவது சமூகநீதியை முன்னேற்றுவதற்கான ஒரு முக்கிய அடையாளமாகும். இந்த வாய்ப்பு மக்களின் அரசியல் பங்களிப்பையும், சமூக முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**மலையக மக்களுக்கு அரசால் வழங்கப்பட்ட வாய்ப்புகள்:**

1. பெண்களுக்கான அரசியல் பங்கேற்பு

● பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க புதிய வேட்பாளர் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

● அரசியல் தளத்தில் பெண்கள் முன்னேறுவதற்கு பயிற்சிகள் மற்றும் ஆதரவு திட்டங்கள் வழங்கப்படலாம்.

2. மலையக ஆண்களின் பங்குபற்றுதல்

● பின்தங்கிய சமூகத்தை அரசியலின் மையத்துக்கு கொண்டு வர, மலையக ஆண்களுக்கும் இடஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருக்கலாம்.

● வேலைவாய்ப்பு மற்றும் சமூக மேம்பாட்டுக்கான சிறப்பு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை அரசு முடிவு செய்யும்.

3. சமூகவிவசாய குரல்கள்

● பின்தங்கிய மக்களுக்கு அரசாங்கம் திறந்தவாய்ப்புகளை வழங்கி அவர்களின் பிரச்சினைகளை தேசிய அரசியலுக்குள் கொண்டு வர முயற்சிக்கிறது.

● மக்கள் நலத்திட்டங்களில் மலையக சமூகத்தின் பிரதிநிதிகள் முக்கிய பங்கு வகிக்க வைக்கப்படுவார்கள்.

**சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புகள்:**

● பிரதிநிதித்துவம்: வாய்ப்புகள் வழங்கப்பட்டாலும், உண்மையான ஆளுமை மற்றும் செயல்திறன் மக்களின் நன்மைக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

● சமூக அங்கீகாரம்: மலையக மக்களின் வரலாற்று சவால்களை போக்க அரசாங்கத்தின் நீண்டகால பொறுப்பு அவசியம்.

● பொதுக்கூட்டணி: பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வழங்கப்படும் அரசியல் வாய்ப்புகள் சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் செயல்படுவது முக்கியம்.

இது ஒருபுறம் மக்களின் அரசியல் பங்கேற்பை உறுதிப்படுத்துவதோடு, மறுபுறம் மலையக மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளையும் மேம்படுத்தும் வழி அமையும். அரசாங்கம் தொடர்ந்து இதை செயலில் மாற்றுவதற்கான முயற்சிகளில் உறுதியாக இருக்க வேண்டும்.

இது புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் மீது முழுமையாக சார்ந்துள்ளது. மக்கள் மீது அரசின் அக்கறை இருக்குமானால், இந்த தேவைகளை பூர்த்தி செய்ய முன்வரலாம்.

மொத்தத்தில், 2024 ஆம் ஆண்டில் மலையக பொருளாதாரத்தின் வளர்ச்சி அரசின் கொள்கைகள், உலக சந்தை நிலைமைகள், மற்றும் உள்ளூர் மாற்றங்களைப் பொறுத்திருக்கும்.

# “வில்லியம் ஹென்றி ‘பில்’ கேட்ஸ்” டிஜிட்டல் யுகத்தின் முன்னோடி

மூன்றாம் பக்கத் தொடர்ச்சி....

பொழுதொரு வண்ணமுமாக வளர ஆரம்பித்தது. தனது நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் திறமை மதிப்பிடப்பட்டு திறமைக்கேற்றவாறு ஊக்கிவிப்பு பரிசில்கள், சம்பள உயர்வு, பதவி உயர்வு, போனஸ் என்பன வழங்கப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும். கடினமாக, தீவிரமாக முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி வேலை செய்ய முடியாதவர்களை இந்த இடம் உங்களுக்கு ஏற்றதல்ல என்று சொல்லி வெளியே அனுப்பிவிடுவாராம்.

1981-ஆம் ஆண்டில் IBM கணினிகளுக்கான MS-DOS என்ற Operating System அதாவது இயங்குதளத்தை அறிமுகம் செய்தார், அதன் சிறப்பை எடுத்துக்கூறி மற்ற கணினி தயாரிப்பாளர்களையும் MS-DOS இயங்குதளத்தைப் பயன்படுத்துமாறு ஊக்கமூட்டினார் ஃபில்கேட்ஸ்...அது ஏற்றுக்கொள்ளப்பட்டு 80களில் கணினிகள் பெருமளவில் விற்பனையாகத் தொடங்கின விற்பனையாகும் ஒவ்வோரு கணினிக்கும் அதன் இயங்குதளத்திற்கான லைசென்ஸ் கட்டணம் கிடைப்பதால் ஃமைக்ரோசாப்ட்டின் வருமானம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது.

‘மாறிவரும் உலகில் மாறாதிருப்பது மாற்றம் ஒன்று மட்டுமே’ என்ற சொற்றொடர் கணினி உலகத்திற்குதான் மிகவும் பொருந்தும். அதை உணர்ந்துதான் போட்டியை எதிர்பார்த்துதான் ஃமைக்ரோசாப்ட் நிறுவனமும் புதிய புதிய மென்பொருள்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. ஐடீஆ கணினிகளுக்கு போட்டியாக மவுஸ் கொண்டு இயக்கும் ஆப்பிள் கணினிகள் அறிமுகமானபோது அது மிகவும் பிரபலமடையும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர், உலகின் மொத்த கவணமும் ஆப்பிள் பக்கம் திரும்பியபோதும் அசரவில்லை பில்கேட்ஸ். அசுர வேகத்தில் ஃமைக்ரோசாப்ட் விண்டோஸ் என்ற இயங்குதளத்தை அறிமுகம் செய்தார் அது இமாலய வெற்றிப் பெற்றது .

பில்கேட்சிடம் உள்ள ஒரு நல்ல அம்சம் தொழிலாளர், நிர்வாகி, முதலாளி என்ற இரும்புத் திரைப் பிரிவு வேறுபாடுகள் இல்லை. எல்லோரும் கலந்து பழகலாம், ஆலோசனை வழங்கலாம். மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் பணியாற்றிய மெலிண்டா பிரெஞ்ச் என்ற பெண்ணை நேசிக்கத் தொடங்கினார். கண்டதும் காதல் என்று கொள்ளாது ஐந்து வருடங்களுக்கு மேலாக நெருங்கிப் பழகிய பின்னர் அந்த நட்பு காதலாக மலர்ந்தது. அவள் அழகைவிட அறிவால், உழைப்பால்



உயர்ந்தவள். சுறுசுறுப்பானவள், கலகலப்பான இயல்பு உடையவள்.

அது மட்டுமல்லாமல் 90களின் தொடக்கத்தில் பிரபலமாகத் தொடங்கியிருந்தது இணையம். இணையத்தில் உலா வர உதவும் (உலவி) ‘நெட்கேப்ஸ்’ (net cafe) என்ற மென்பொருளைத் தயாரித்து விற்பனை செய்தார் மாக் ஆண்டர்சன் என்பவர். இணையத்தின் எதிர்காலத்தை நன்கு புரிந்து கொண்ட பில்கேட்ஸ் அந்த மென்பொருளை விலைக்கு வாங்க விரும்பினார், ஆனால் அதை விற்கவோ ஃமைக்ரோசாப்ட்டுடன் இணையவோ மாக் ஆண்டர்சன் மறுக்கவே மீண்டும் தன் மந்திரத்தை நிகழ்த்திக் காட்டினார் ஃபில்கேட்ஸ்,

நெட்கேப்ஸ்க்கு இணையான இண்டர்நெட் எக்ஸ்புளோரர் என்ற இணையச் செயலியை உருவாக்கி அதனை புதியக் கணினிகளுடன் இலவசமாக விநியோகம் செய்தார் அதனால் விலைக்கு விற்கபட்டு வந்த நெட்கேப்ஸின் இணைய ஆதிக்கம் மங்கத் தொடங்கியது அதுமாதிரியான விற்பனை தந்திரம் முறையற்றது என்று ஃமைக்ரோசாப்ட்டின் மீது நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டன ஆனால் ஃபில்கேட்ஸை அசைக்க முடியவில்லை. என்ன வந்தாலும் பில்கேட்ஸுக்கே வெற்றி கிடைக்கும் ஏனென்றால் பில்கேட்ஸின் போட்டியாளர்கள் குறி வைப்பது பெரிய பெரிய நிறுவனங்களை ஆனால் பில்கேட்ஸ் குறி வைப்பதோ சாமானியர்களை.

பில் கேட்ஸ் ஜனவரி 1, 1994 ஆம் வருடம் மெலிண்டாவை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஜெனிபர் காதரின், போஃப் அடேல் என்று இரு மகள்களும் ரோடி ஜான் என்ற ஒரு மகனும் உள்ளனர்.

1999-ஆம் ஆண்டு ‘டீரளைநௌள யவ வாந ளிநநன ழக வாழரபாவ’ என்ற நூலை எழுதினார் ஃபில்கேட்ஸ் 25 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 60 நாடுகளில் விற்பனையாகிறது அந்த நூல், அதற்குமுன் அவர் எழுதிய வூாந சழயன ய ாநயன என்ற நூலும் அதிகமாக விற்பனையாகிறது 2 நூல்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் முழு தொகையையும் அற நிதிக்கு வழங்கியிருக்கிறார் பில்கேட்ஸ், மெலிண்டா ஃபிரெஞ்சு கேட்ஸ் என்பவரை 1994 ஆம் ஆண்டு மணந்து கொண்டார் பில்கேட்ஸ், அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பில்கேட்ஸும் மனைவியும் இணைந்து பில் ரூ மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையை நிறுவி இது வரை சுமார் 27 பில்லியன் அமெரிக்க டாலரை சமூக நலப் பணிக்காக வழங்கியிருக்கின்றனர்.

விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்துதான் விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது. இப்பொழுது விண்டோஸ் 8.1 இயங்குதளம் வெளியிடப்பட்டு வெற்றிகரமாக இயங்கிகொண்டிருக்கிறது. அத்துடன் இவர்கள் வெளியிட்ட விண்டோஸ் எம்.இ(ME) மற்றும் விண்டோஸ் விஸ்டா மட்டுமே தோல்வியுற்றது.

நாமும் வாழ்க்கையில் நம்பிக்கையோடும் விடாமுற்சியோடும் போராடினால் நமக்கும் அந்த வானம் வசப்படாமலா போகும்!

நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன்

ஆனால் அனுபவமோதவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.

- பில் கேட்ஸ்

பயிற்சியும் முயற்சியும் இருந்தால் ஒவ்வொரு மனிதனும் சாதனையாளனே என்பதற்கு பில் கேட்ஸ் (Bill Gates) ஒரு மிகச்சிறந்த எடுத்துகாட்டு.

# பழந்தமிழரின் பயிர்ப்பாதுகாப்பு முறைகள்

மக்களின் வாழ்க்கைநிலை மேம்பட்டு விளங்குவதற்குத் தொழில்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சங்க காலச் சமுதாய மக்களை அவர்களின் தொழில் அடிப்படையில் உழவர்கள், கைத்தொழில் செய்வோர், வேட்டுவர், இடையர், மீனவர், வணிகர், அரசியல் பணி செய்பவர் என்று பகுத்துப் பார்க்க முடிகிறது.

நானிலங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சங்க கால மக்கள் தொழில்களைச் செய்துள்ளனர். இதற்கு நில அமைப்பும் அவர்கள் வாழ்வியற் சூழலும் அடிப்படைகளாக இருந்துள்ளன.

வேளாண்மைத் தொழில், நெசவுத் தொழில், இரும்புத் தொழில், அணிகலத் தொழில், ஓவியத் தொழில், இசைக் கருவிகள் செய்தல் போன்றவை குறித்துச் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. வேளாண்மைத் தொழில் பற்றிய குறிப்புகள் பலவகையில் பதிவாகியிருக்கின்றன. அவற்றுள் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த பதிவுகள் மிகவும் கவனம் பெற்றுத் திகழ்கின்றன.

### வேளாண் தொழில்

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. பழங்கால மனிதர்கள் காட்டில் கிடைக்கும் பழங்கள், பயறுகள் போன்றவற்றை உண்டு வாழ்ந்துள்ளனர். மக்கள் தொகை பெருகப் பெருக உணவின் தேவையும் பெருகியது. உணவுக்காக நிலங்களைப் பயன்படுத்திப் பயிர் செய்துள்ளனர்.

மனிதன் தோன்றிய போதே வேளாண்மையும் தோன்றியது எனலாம். உணவுப்பொருளின் இன்றியமையாமையை உணர்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர். எனவே வேளாண்மைத் தொழில் தலைமைத் தொழிலாக, உயிர்த்தொழிலாகப் போற்றப்பட்டது. அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் வேளாண்மை என்பதற்கு இவ்வாறு விளக்கம் அளிக்கிறார்

“வேளாண்மையைக் குறிக்க ‘Agriculture’ என்ற சொல் பயன்படுத் தப்படுகின்றது. Agriculture என்பது இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்ததாகும்.

‘Ager என்றால் வயல் (Field), ‘Culture’ என்றால் பண்படுத்தல் (cultivate) எனப் பொருள் கொள்கின்றனர். இவற்றைப் பெருத்த நோக்கினால் நிலத்தை நல்ல வகையில், மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுக்கும் வகையில், நல்ல பயிர்விளையும் வகையில் பண்படுத்துதல் ‘Agriculture’ ஆகின்றது (சமுதாயமும் பண்பாடும், ப. 219).

வேளாண்மை என்ற சொல்லுக்குக் கொடை, உபகாரம், பயிர் செய்யுந்தொழில், சத்தியம் எனவரும் பொருளைத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகின்றன.




தமிழர் சமுதாயம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையுடையதாக இருந்திருக்கிறது. சங்க கால மக்கள் நிலங்களை நான்கு வகையாகப் பிரித்து, அந்தந்த நிலங்களுக்கேற்ற தொழில்களைச் செய்து வந்துள்ளனர்.

இன்றைக்கு இருப்பதுபோலவே பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பகுதி மக்கள் வேளாண்மையையே தங்கள் வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டிருந்தனர்.

### விளைநிலங்களை உருவாக்குதல்

வேளாண்மைத் தொழிலுக்கு நிலமும், நீரும் இன்றியமையாதவையாகும். மலைப் பகுதியில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்றவாறு நிலத்தை வெட்டிச் சீர்செய்து, பயிர் செய்துள்ளனர். மேலும் மலைப் பகுதியிலுள்ள காடுகளை அழித்தும், மரங்களை வெட்டியும் விளைநிலங்களை உருவாக்கியுள்ளனர்.

விளைநிலங்களுக்காக வெட்டப்பட்ட மரங்களைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். மரங்களை வெட்டிச் சுட்டெரித்துச் சீர்திருத்தப்பட்ட புனம் ‘சுடுபுனம்’ என்ற ழைக்கப்பட்டது. மரங்களை எரித்ததால் மண் நன்கு சுடப்பட்டு பயிர்கள் நன்றாக வளர உதவுகின்றது.

மரங்களை எரித்ததனால் கிடைக்கக்கூடிய சாம்பல் உரமாகவும் பயன்பட்டிருக்கிறது. தீயினால் காட்டினைத் திருத்தி எரிக்கப்பட்ட கொல்லை ‘எரிதின் கொல்லை’ என்றழைக் கப்பட்டது. குறவர்கள் காடுகளிலுள்ள அகில், சந்தனம் போன்ற மரங்களை வெட்டியழித்து விளைநிலத்தை உருவாக்கிய செய்தி காணப்படுகின்றது.

“சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே” (குறுந். 2911-2)

“நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை” (குறுந். 339 1)

“எரிதின் கொல்லை யிறைஞ்சிய ஏனல்” (அகம். 288 5)

வேளாண்மைத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதிகள் அதனியல்பு கருதி வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டதைச் சங்கப் பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலம் ‘துடவை’ என்றும், பழமையான விளைநிலம் ‘முதைபுனம்’ என்றும், மரங்களை வெட்டியெரித்து உருவாக்கிய நிலம் ‘சுடுபுனம்’ என்றும் வழங்கப்பட்டுள்ளன.

காடுகளை அழித்து விளைநிலமாக்கப்படும் புதிய நிலம் ‘இதை’ என்று வழங்கப்பட்டுள்ளது. ‘புனம்’ என்பது மலைச்சார்பான கொல்லையாகும்.

“புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை” (குறுந். 105 1)

“முதைபுனங் கொன்ற ஆர்கலி உழவர்” (குறுந். 155 1)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய இந்நானிலங்களும் வன்புலம், மென்புலம் என்ற இரு பிரிவில் அடங்குகின்றன. மண்வளமும், நீர்வளமும் குறைந்த பகுதியாகிய குறிஞ்சியும், முல்லையும் வன்புலத்திலும் மண்வளமும், நீர்வளமும் நிறைந்த பகுதியாகிய மருதமும், நெய்தலும் மென்புலத்திலும் அடங்குகின்றன.

தினை, வரகு முதலிய புன்செய் பயிர் விளையும் நிலங்களைப் ‘புன்புலம்’ என்றழைத்தனர். இதை ஒரு ஐங்குறுநூற்றுப் பாடல் இவ்வாறு சுட்டுகிறது:

“புன்புலம் வித்திய புனவர் புணர்த்த” (ஐங். 246 3)

### நீர் ஆதாரங்கள்

பயிர்த்தொழிலுக்கு நிலத்தை அடுத்து மிகவும் இன்றியமையாதது நீர்வளமாகும். ஒரு நாட்டின் வளமும் நலமும் அந்நாட்டின் நீர்வளத்தைக் கொண்டு அமைகின்றன. மனிதனுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உருவாக்குவதற்கும், மனிதனின் உடல் நலத்திற்கும் நீர் இன்றியமையாததாகின்றது.

நீரில்லையேல் இவ்வுலகம் இல்லை என்று கபிலர் குறிப்பிடுகின்றார். பண்டைக் காலந்தொட்டே வேளாண்மைக்கு நீர் வளம் தேவை என்பதை மக்கள் அறிந்திருந்தனர். நீர்நிலைகளை அமைத்துக் கொடுப்பது அரசனின் கடமையாகக் கருதப்பட்டது.

திணை அடிப்படையில் வாழ்ந்த சங்க கால மக்கள், அந்தந்த நிலத்திற்கும் இயற்கையாக அமைந்த நீர்நிலைகளையும் செயற்கையாக அமைத்துக்கொண்ட நீர்நிலைகளையும் அன்றாட வாழ்க்கைக்கும், வேளாண்மைக்கும் பயன்படுத்திக் கொண்டனர்.

குறிஞ்சி நிலத்தில் இயற்கையாக அமைந்த நீர்நிலைகளாக அருவியும், சுனையும் காணப்படுகின்றன. அருவி நீரும், சுனை நீரும் வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

“மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும்” (குறுந். 371 1-2)

“அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்ப” (நற். 5 2)

மழை நீர் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய செல்வமாகும். உழவுத் தொழிலுக்கு ஏற்றவாறு பெய்யும் மழை ‘தொழில் மழை’ என்று அழைத்தனர். குறிஞ்சி நில மக்கள் பருவமழை பெய்யாத காலங்களில் மழைநீரைக் குளங்களில் சேமித்து வைத்துப் பயன்படுத்தியுள்ளனர்.

நீர் சேமித்து வைத்துள்ள குளங்களின் கரைகள் உடையாமல் பாதுகாக்கக் காவல் பணி மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் குறிஞ்சித்திணைப் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

“தொழின்மழை பொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉஞ் சிறுகோட்டுப்
பெருங்குளங் காவலன் போல” (அகம். 252 11-13)

“அன்னாய் வாழிவேண் டன்னை யுவக்காண்
மாரிக் குன்றத்துக் காப்பா ளன்னன்” (ஐங். 206 1-2)

பழந்தமிழர்கள் நீர்நிலைகளை அமைக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் சிறந்து விளங்கியுள்ளனர். பள்ளமான பகுதிகளையும், அறைகளையும் பொறைகளையும் இடையிடையே கரையாக அமையுமாறு பிறைவடிவில் குளங்களை அமைத்துள்ளனர். குளங்களுள் சிறுகுளம், பெருங்குளம் என இரண்டு வகை காணப்படுகின்றது.

இவற்றுள் சிறுகுளத்து நீர் குடிப்பதற்கும், பெருங்குளத்து நீர் பயிர்த்தொழிலுக்கும் பயன்படுத்தப்பட்டதைக் கீழ்வரும் புறநானூற்றுப் பாடலடிகளால் அறிந்துகொள்ள முடிகின்றது.

“அறையும் பொறையும் மணந்த தலை
எண்ணாள்திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர் சிறுகுளம்” (புறம். 118 1-3)

பெய்த மழைநீரைக் கொண்டு பயிர் செய்ததோடு மட்டுமல்லாமல், எஞ்சிய நீரைத் தேக்கி வைத்து மழை பெய்யாக் காலத்தில் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது.

## உழவும் வாழ்வும்

‘அகல உழுதலின் ஆழ உழுதல் நன்று’ என்பது பழமொழியாகும். எருதுகளைக் கொண்டு பல ஏர்களால் நிலத்தை உழுத செய்தி குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றது. அவ்வாறு உழுத நிலத்தில் பயறுகளை விதைத்துள்ளனர். நிலத்தை உழுவதற்கு எருதுகளை மட்டுமின்றி எருமைகளையும் சங்க காலத்தில் பயன்படுத்தியுள்ளனர்.

“முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட வுழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்து” (அகம். 262 1-3)

“பெருநெல் பல்கூட்டு எருமை உழவ” (நற். 60 2)

களைகளைப் போக்கவும், ஈரம் தாங்கவும், பயிர்கள் நன்றாக வேர்விட்டுப் படரவும், கீழ்மண் மேலும், மேல்மண் கீழும் புரளவும் ஆழ உழும் முறையே உழவர்களால் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. வேளாண்மையில் உழுதல், உரமிடுதல், களைநீக்குதல், நீர் பாய்ச்சுதல், பயிர்ப்பாதுகாப்பு ஆகியவை இன்றியமையாதவையாகும்.

சங்க காலத்தில் விதைப்பயிறுகளை விதைக்க ‘வட்டி’ என்ற சிறுபெட்டியைப் பயன்படுத்தியுள்ளனர். இதைக் ‘கடகப்பெட்டி’ என்றும் வழங்கியுள்ளனர். ஓலை அல்லது மூங்கில்களைக் கொண்டு ‘வட்டி’ செய்யப்பட்டுள்ளதைக் கீழ்க்காணும் அறியமுடிகின்றது.

“முதைப்புனங் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுள” (குறுந். 155 1-2)

## பயிரிடுதல்

குறிஞ்சி நில மக்கள் ஐவன நெல், தினை, பருத்தி, அவரை, உழுந்து போன்ற பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். ஐவன நெல் மலைப்பகுதிகளில் விளையும் நெல்லாகும். இதை ‘மலைநெல்’ என்றும் வழங்குவர். மலைப்பகுதியிலுள்ள காடுகளைத் தீயிட்டுக் கொளுத்திச் சீர்செய்த நிலங்களில் அருவி நீரைக்கொண்டு ஐவன நெல்லை விதைத்துள்ளனர்.

“அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி” (குறுந். 100 1)

“துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி
ஐவனங் கவருங் குன்ற நாடன்” (ஐங். 267 2-3)

வேளாண்மைத்தொழில்செய்து வந்த மக்கள் எந்தெந்தக் காலங்களில், எந்தெந்தத் தாவரங்கள் காய்க்கும் என்பதை அறிந்திருந்தனர். பருவ காலத்திற்கு ஏற்றவாறு பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். உழுந்து பனிப்பருவத்தில் காய்க்கும், அவரை பனிப்பருவத்தில் மலரும் போன்ற செய்திகள் குறுந்தொகைப் பாடொன்றில் இடம்பெற்றுள்ளன.

“பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அற்சிரம் வாரா தோரே” (குறுந். 82 4-6)

## ஊடுபயிர் முறை

“ஒரு பயிரின் வரிசைகளுக்கிடையில் மற்றொரு பயிரைச் சாகுபடி செய்தல் ‘ஊடுபயிரிடுதல்’ எனப்படும். ஊடுபயிர் முறையில் முதன்மைப் பயிரின் (Main Crop) எண்ணிக்கை எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது. பயிரின் இடைவெளியைத் தக்க மாற்றம் செய்து ஊடுபயிரான (Inter crop) வேறொரு பயிரை அவ்விடைவெளியில் பயிரிட வேண்டும்.

ஊடுபயிரின் வயது முதன்மைப் பயிரின் வயதைவிடக் குறைவாக இருத்தல் வேண்டும். சில சமயங்களில் ஊடுபயிரின் வயது முதன்மைப் பயிரின் வயதைவிடக் கூடுதலாக இருப்பதும் உண்டு.” இவ்வாறு அறிவியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

குறிஞ்சி நில மக்கள் தினைப் பயிர்களுக்கிடையே அவரையையும், பருத்தியையும் ஊடுபயிராக விதைத்திருந்த செய்தி காணப்படுகிறது. தினை கொய்த தாளில் அவரை படர்ந்து காய்த்திருக்கின்றது. இதிலிருந்து ஒரு பயிருக்கிடையே மற்றொரு பயிரைப் பயிரிடும் ‘ஊடுபயிர்’ முறையைச் சங்க காலத்திலேயே தமிழர்கள் அறிந்திருந்ததைக் காணமுடிகிறது.

“சிறுதினை கொய்த விருவி வெண்காற்
காய்த்த வவரைப் படுகிளி கடியும்” (ஐங். 286 1-2)

“பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி யவரை பூக்கும்” (குறுந். 82 4-5)

“வரை வெள்ளருவி மாலையின் இழிதர
கூலம் எல்லாம் புலம்புக நாளும்” (நற். 93 2-3)

நற்றிணையின் முதல் பதிப்பாசிரியராகிய பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் மலைப்பகுதியில் வாழ்ந்த குறவர்கள் நெல், புல், வரகு, சாமை, தினை, இறுங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, சோளம், கம்பு ஆகிய பதினெட்டு வகைக் கூலங்களை விளைவித்ததாக உரை எழுதியிருப்பது கவனத்திற்குரியது.

எருவிடுதல்

சங்க காலத்தில் கால்நடைகளின் கழிவுகளையும், இலை தழைகளையும் உரமாகப் பயன்படுத்தியுள்ளனர். நிலத்தின் வளத்திற்கும், பயிர்களின் வளத்திற்கும் எருவிடுதல் இன்றியமையாததாகும். தொழு உரமிடுவதும், தழையுரமிடுவதும் இன்றும் வழக்கிலுள்ளன.

அறிவியல் வளர்ச்சியால் செயற்கை உரங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. பயிருக்குத் தேவைப்படும் சத்துக்களை தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து இவற்றில் எது தேவையோ அதை மட்டும் இடும் முறையும், இலை வழியாக உரமிடும் முறையும் (Foliar application) அறிவியல் வளர்ச்சியால் விளைந்தவையாகும். மீண்டும் தொழு உரங்கள் (farm yard manure), பசுந்தாள் உரங்கள் (green - manure), உயிர் உரங்கள் (Bio-fertilizer) ஆகிய இயற்கை உரங்களைப் பயிருக்கு இடும் சூழல் தற்காலங்களில் உருவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட வுழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்து"
(அகம். 262 1-3)

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (குறள். 1038)

குறிஞ்சிநில மக்கள்பழமையான நிலங்களில் மழை பெய்து நன்கு வளர்ந்துள்ள கொடிகள் மண்ணில் மறையும்படி உழுத செய்தி காணப்படுகின்றது. கொடிகள் தழையுரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நிலத்தை உழுவதற்கு முன்னர் எரு இட்டுள்ளனர். உழுவதைக் காட்டிலும் உரமிடுதல் சிறந்தது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பயிர்ப் பாதுகாப்பு

மலையும் மலை சார்ந்த பகுதியில் விளைந்த பயிர்களைப் பறவைகளிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாப்பது பெரும் பணியாக இருந்துள்ளது.

குறிஞ்சிக் குறவர்கள் யானை, பன்றி போன்ற விலங்குகளை விரட்டித் தினைப்புனக் காவல் மேற்கொண்டிருந்தனர். குறிஞ்சி நிலக் கொடிச்சியர் இசைக்கருவிகளை இசைத்து கிளிகளை விரட்டியுள்ளனர்.

கிளிகடிதல்

குறிஞ்சி நிலத்திற்குரிய ஒழுக்கம் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகும். தலைவியின் பெற்றோர் தலைவியைத் தோழியுடன் கிளிகளை விரட்டத் தினைப்புனத்திற்கு அனுப்புகின்றனர்.

தினைப்புனக் காவலில் உள்ள தலைவி தலைவனைச் சந்திக்கின்றாள். இத்தகைய சூழலையுடைய குறிஞ்சித்திணைப் பாடல்களில் பயிர்ப்பாதுகாப்பு குறித்த செய்திகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.

"வேங்கைஅம் கவட்டிடைச் சாந்தின் செய்த
களிற்றுத்துப்பு அஞ்சாப் புலிஅதள் இதணத்து
சிறுதினை வியன்புனம் காப்பின்" (நற். 351 6-8)

"நெடுவரை ஆசினிப் பணவை ஏறி" (கலி. 41 9)

வேங்கை மரத்தின் உயர்ந்த கிளையில் கட்டிய பரணில் இருந்து கிளிகளை ஓட்டிய செய்தி காணப்படுகின்றது. சந்தன மரக்கட்டைகளைக் கொண்டு பரண் அமைத்து, அதன்மேல் புலித்தோலை விரித்துள்ளனர்.

இத்தகைய பரணின் மீதிருந்து தலைவி கிளிகளை விரட்டியதாகக் கூறப்படுகின்றது. பரணை இதணம், கழுது, பணவை என்ற பெயர்களால் வழங்கியுள்ளனர்.

கிளிகடி கருவிகள்

குறிஞ்சி நில மக்கள் தழல், தட்டை, குளிர், கணை, கிணைப்பறை, கவண் போன்ற கருவிகளைக் கொண்டு கிளிகளை ஓட்டியுள்ளனர். மேலும்தொண்டகச்சிறுபறையை இசைத்தும் கிளிகளை விரட்டித் தினைப்புனக் காவல் புரிந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்களால் அறியமுடிகின்றன.

குளிர்

குளிர் என்னும் கருவி கொண்டு தினைப்புனத்தில் மேய வரும் கிளிகளை விரட்டியுள்ளனர். இக்கருவிகளைக் கொண்டு பெரும்பாலும் பெண்களே கிளிகளை விரட்டியுள்ளனர். இக்கருவி இசைக்கு ஏற்பப் போடப்படும் தாளத்தைப் போன்று ஒலிக்கக்கூடியது.

குளிர் என்பது மூங்கிலை வீணைபோல் கட்டித் தெறித்து ஓசை எழுப்பும் கருவியாகும். ஒரு சில நேரங்களில் குளிரின் ஓசையைக் கேட்டு மயங்கிய கிளிகள் தினைப்புனத்தை விட்டுப் போகாமலும் இருப்பதுண்டு என்று உ.வே.சாமிநாதையர் குறுந்தொகை உரையில் குறிப்பிடுகின்றார்.

"படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே
இசையின் இசையா இன் பாணித்தே" குறுந். 291 2-3)

தட்டை

தட்டை என்பதும் தட்டைப்பறை என்பதும் ஒன்றாகக் கொள்ளப்பட்டுள்ளது. மூங்கிலைக் கணுக்குக்கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டுவது என்று நச்சினார்க்கினியர் குறிஞ்சிப்பாட்டு உரையில் குறிப்பிடுகின்றார். தட்டையின் ஒலியைத்தேரை எழுப்பும்ஒலிக்கு உவமையாகச் சங்கப்புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்" (குறுந். 193 2-3)

தழல்

மலைச்சாரலில் உள்ள கொடிப் பிரம்பினால் பின்னிய, தழல் என்னும் கருவியைக் கையால் சுழற்றும்போது எழும் ஓசையின் வழி பறவைகளை விரட்டியுள்ளனர்.

தழல் என்ற கருவியைச் சுழற்றியும், தட்டை என்ற கருவியைப் புடைத்தும் (தட்டியும்) தினைப்புனத்தைப் பாதுகாத்துள்ளனர். குளிர், தட்டை, தழல் ஆகிய இம்மூன்று கருவிகளும் பெண்களால் மட்டும் பயன்படுத்தப்பட்ட பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளாகும்.

"தழலை வாங்கியும் தட்டை யோப்பியும்
அழலேர் செயலை அந்தழை அசைஇயும்
குறமகள் காக்கும் ஏனல்" (அகம். 188 11-13)

"தழலும் தட்டையும் குளிரும் பிறவும்
கிளிகடி மரபின ஊஒழ் வாங்கி" (குறிஞ். 43-44)

கவண்

கவண் என்பது கைவிரலுள் கோத்துச் சுழற்றும் கயிற்றுக் கருவியாகும். கவணைக் கொண்டு குறிஞ்சிநில மகளிர் பறவைகளையும், கானவர்கள் விலங்குகளையும் விரட்டியுள்ளனர்.

தினைப்புனத்தில் மேய்கின்ற யானைகளை விரட்டக் கவண் கல் எறிந்துள்ளனர். கானவர்கள் நீண்ட ஆசினிப்பலா மரத்தில் கட்டப்பெற்றுள்ள பரணின்மீது ஏறிநின்று கவண் கல் எறிகின்றனர். அவ்வாறு எறியப்பட்ட கல்லானது, வேங்கைப் பூக்களைச் சிதறி, கனிந்த ஆசினிப் பலாவை உதிர்த்து, தேன் கூட்டைச்சிதைத்து, மாங்கொத்துக்களை உழக்கி, வாழை மடலைக் கிழித்துப் பலாப்பலத்தினுள் சென்று தங்குவதாகக் கூறப்படுகின்றது.

இதிலிருந்து கவண் கல் வீசுவோர் ஆற்றலையும், அக்கல் செல்லும் வேகத்தின் திறனையும் கீழ்க்காணும் கலித்தொகைப் பாடலால் அறிய முடிகின்றது.

"கடுவிசைக் கவணையில் கல் கை விடுதலின்
இறுவரை வேங்கை ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிரா
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி"
(கலி 41 10-13)

விலங்குகடி கருவிகள்

சங்க கால மக்கள் அடார், கணை, கிணை, ஞெகிழி போன்ற கருவிகள் விலங்குகளை விரட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

ஞெகிழி

யானையை விரட்டுவதற்குக் கொள்ளிக் கட்டையைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வழக்கம் இன்றும் உள்ளதைக் காணலாம். யானை முதலான விலங்குகள் நெருப்புக்கு அஞ்சும் என்பதையறிந்து கொள்ளி கொண்டு யானையை ஓட்டியுள்ளனர்.

"ஞெகிழியில் பெயர்த்த நெடுநல் யானை" (குறுந். 357 6)

கணை, கிணைப்பறை

குறிஞ்சி நில மக்கள் தினைப்புனத்தில் புகுந்த யானையைவில்கொண்டு'கணை' எய்து விரட்டிய செய்தி காணப்படுகின்றது. 'கிணை' என்பது ஒருவகைப் பறையாகும். கிணைப்பறையால் ஒலியெழுப்பி விலங்குகளிடமிருந்து பயிர்களைக் காத்துள்ளதை அறியமுடிகிறது.

யானையை விரட்டுவதற்குக் குறிஞ்சித்திணைக்குரிய தொண்டகச் சிறுபறையையும் பயன்படுத்தியுள்ளனர்.

"ஒளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென ஆர்ப்பவர் ஏனல் காவலரே" (கலி. 52:13-14)

"சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்
திரவரி வாரின் தொண்டகச் சிறுபறை" (குறுந். 375 3-4)

அடார்

தினைப்புனத்தில் விளைந்த தினையை மேய வருகின்ற பன்றியைப் பிடிக்க 'அடார்' என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். 'அடார்' என்பது பெரிய கல்லாலான அமைப்பாகும். கருங்கல் பலகையை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கீழே முட்டுக்கொடுத்து உணவை உள்ளே வைத்திருப்பர்.

உணவை உண்ண வரும் விலங்கு அந்த முட்டைத் தொட்டவுடன் கல் விழுந்து அதனுள் மாட்டிக்கொள்கிறது. பன்றிகள் தினைப்புனத்திற்கு வரும் சிறிய வழிகள்தோறும் இக்கற்பொறியை வைத்திருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழியாக அறியமுடிகிறது.

"தினையுண் கேழல் இரியம் புனவன்
சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்
ஒண்கேழ் வயப்புலி படூஉம் நாடன்" (நற். 119 1 - 3)

"விளைபுன நிலத்திலின் கேழல் அஞ்சிப்
புழைதொறும் மாட்டிய இருங்கல் அடாஅர்" (மலை. 193-94)

தற்காலத்தில் அணில், எலி போன்ற சிறிய

தொடர்ச்சி அடுத்த வாரம் ........

# தனி நபர் வணிக முறை



தனியாள் வணிக முறை என்பது தொழிலமைப்புகளின் மிகப் பழமையான வடிவமாகும். இத்தொழிலை அமைப்பது எளியது, சுலபமானது. உலகளவில் அனைத்து நாடுகளிலும் தனியாள் வணிக அமைப்பு செயல்படுவதைக் காணலாம். இத்தகைய தொழில் அமைப்புகள் தற்காலத்தில்கூட, அதனுடைய பயன்பாடு மறையாமல் பெரும்பான்மை தொழில் முனைவோரால் நடத்தப்பட்டு வருகிறது. தனியாள் வணிகம் என்பது ஒரே ஒரு நபரின் முதலுடன், அந்நபரின் அனுபவம் மற்றும் தொழில் திறனைக்கொண்டு, முழுப்பொறுப்பினையும் அந்நபரே ஏற்று நடத்தும் வணிகம் ஆகும். தொழிலுக்குத் தேவையான முதலை கடனாகப் பெறுவதுடன், தேவைப்பட்டால், நிர்வாகத்தில் துணைபுரிய வேறு சில பணியாளர்களையும் வேலைக்கமர்த்திக் கொள்வர்.

வியாபாரத்தை அவரே நிர்வகிப்பதால், அதில் கிடைக்கும் இலாப நட்டம் அவரையே சாரும். இவ்வகையான சில தொழில்களைத் துவங்க ஒரே ஒரு சட்ட நடைமுறை யாதெனில் உள்ளாட்சியிடமிருந்தோ அல்லது நகராட்சியிடமிருந்தோ உரிமம் பெற வேண்டியிருக்கும். இவ்விதி ஒருசில வணிகத்திற்கு மட்டும் பொருந்தும். இவ்வகையான தொழில் அமைப்பை தனி உரிமையம் அல்லது ஒருநபர் அமைப்பு எனலாம்.

தனியாள் வணிகத்தில் முதலிட்டு அதனை நிர்வகிக்கும் நபர் தனியாள் வணிகர் அல்லது தனியாள் உரிமையாளர் என அழைக்கப்படுகிறார்

பி.கே. கோஷ் மற்றும் ஒய்.கே. பூஷன் ஆகியோரின் கூற்றுப்படி, "தன் சொந்த மூலதனத்தை முதலீடு செய்து, தன் சொந்த திறனையும்நுண்ணறிவையும்பயன்படுத்தி, வியாபாரத்தின் இலாப நட்டங்களை தானே ஏற்றுக்கொள்ளும் ஒரு அமைப்பே தனி ஆள் நிறுவனம் ஆகும்."

"தனி நபரால், தனி நபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும்ஒரு வணிகம்தனி ஆள் வணிகம்" என்று முனைவர் ஓ.ஆர். கிருஷ்ணசாமி அவர்கள் வரையறுக்கிறார்.

"தனி நபர் ஒருவர் அவருடைய மூலதனத்தை முதலீடு செய்து, சொந்தத்திறனையும் நுண்ணறிவையும் வியாபார நடவடிக்கைகளை நிர்வகிக்க பயன்படுத்தி, இலாபம் முழுவதையும் அனுபவித்து நட்டத்திற்கும் பொறுப்பேற்கும் ஒரு வியாபார அமைப்பே தனியாள் வணிகமாகும்" என்று தொழில் மற்றும் வணிக்கலைக்களஞ்சியம்வரைவிலக்கணம் அளித்துள்ளது.

வீலர் அவர்கள்," தனி ஒரு மனிதருக்குச் சொந்தமானதும், கட்டுப்பாட்டுக்குப்பட்டதுமான ஒரு வியாபார அமைப்பை, தனியாள் அவர் தன் சொத்தை வியாபார வெற்றி அல்லது தோல்வி என்ற துணிகரச் செயலுக்குப் பயன்படுத்தி இலாபத்தை பெறுகிறார்" என்று விளக்குகிறார்.

ஜேம்ஸ் ஸ்டீபன்சன் அவர்களின் கூற்றுப்படி, "தனக்காக தானே வியாபாரத்தை நடத்தும் ஒரு நபர் தனி வணிகர் ஆவார். அவர், வியாபாரத்தில் இடும் முதலுக்கு உரிமையாளர் மட்டுமன்றி அமைப்பாளராகவும், மேலாளராகவும் செயல்பட்டு வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தை எடுத்துக்கொண்டு நட்டத்திற்கும் பொறுப்பாகிறார்".

## தனி நபர் நிறுவனத்தின் குணாதிசயங்கள்

தனியாள் வணிகத்தின் குணாதிசயங்கள் பின்வருமாறு.

தனி நபர் உரிமையும் கட்டுப்பாடும்

ஒரு தனி நபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும். அவரே இதன் உரிமையாளர். அவர் ஒருவரே தனி உரிமையாளராகவும் மற்றும் வணிகத்தின் தலைவராகவும், யாருடைய குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக வணிக நடவடிக்கையை மேற்கொள்கிறார். எனவே தனியாள் வணிக அமைப்பில் உரிமையும், கட்டுப்பாடும் தனி நபர் வசமே உள்ளது.

## மூலதனம்

தனியாள் வணிகத் தொழிலமைப்பில் ஒரு நபர் மட்டுமே முதலீடு செய்கிறார். தொழிலுக்குத் தேவையான முதலை, தன் சொந்த சேமிப்பிலிருந்து செலுத்துகிறார். அவர் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ, நிதி நிறுவனங்களிடமோ கடன் பெற்றும் முதலீடு செய்யலாம்.

## வரையறாப் பொறுப்பு

தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. இவ்வரையறாப் பொறுப்பினால் தனி வணிகர் தன் வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும். கடனீந்தோர் உரிமையாளரின் பிற சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உரிமை பெறுகின்றனர்.

## இலாப நட்டம்

வியாபாரத்திலிருந்து கிடைக்கும் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனிநபருக்கே உரியது. இத்தனியாள்வணிகர் இலாபத்தை பிறருடன் பங்கிட்டுக் கொள்ளத் தேவையில்லை. அதுபோலவே நட்டம் ஏற்படுமாயின், அம் முழு நட்டத்தையும் தனி நபரே ஏற்கவேண்டும். எனவே, இலாபமும், நட்டமும் அவரையே சாரும்.

## சட்டத் தனித்துவம் இன்மை

தனியாள் வியாபாரத்தில் தனியாள் வணிகமும் வியாபாரமும் ஒன்றாகக் கருதப்படுகின்றன. கூட்டுப்பங்கு

நிறுமத்தைப்போல் உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை. உரிமையும் நிர்வாகமும் ஒன்றாகவே கருதப்படுகிறது. யார் உரிமையாளரோ அவரே நிர்வாகத்தையும் மேற்கொள்கிறார்.

### தனிச்சட்டம் இல்லை

கூட்டாண்மையை ஒழுங்குபடுத்த இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், கூட்டுப்பங்கு நிறுமத்தை ஒழுங்குபடுத்த இந்திய நிறுமச் சட்டம், கூட்டுறவு சங்கங்களை ஒழுங்குபடுத்த இந்திய கூட்டுறவுச் சட்டம் இருப்பதைப்போல தனி வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.

### பதிவு

கூட்டாண்மை, நிறுமம் முதலிய அமைப்புகள் அவைகளுக்கான சட்டத்தின்படி பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் தனி வணிகர் தன் தொழிலைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. பணம் படைத்த எவரும் தனி வணிகத்தைத் தொடங்கலாம். சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சியிடமிருந்து உரிமம் பெற வேண்டியிருக்கும்.

### வாழ்வு

கூட்டுப்பங்கு நிறுமங்களைப் போல் தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு கிடையாது. தனியாள் உரிமையரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும். அவருடைய இறப்பு அல்லது வியாபாரம் செய்யும் திறமையை இழத்தல் அல்லது அவருக்கு வாரிசு இல்லாமை முதலியன தனியாள் வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்.

### எளிமை

தனியாள் வணிகத்தைத் தொடங்கலும், கலைத்தலும் எளிது. தனியாள் வணிகத்தைக் கலைக்க சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டியதில்லை. இதற்கு சிறிய அளவு முயற்சியே போதுமானது.

### உள்ளூர் வியாபாரம்

பெரும்பான்மையான தனியாள் வணிகம் குறிப்பிட்ட தெரு, வட்டாரம் அல்லது கிராம அளவிலேயே நடைபெறுகின்றன. சிலவகைத் தனியாள் வணிகங்கள் கிளைகளுடன் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன.

### சுய வேலைவாய்ப்பு

தனியாள் வணிகர் பெரும்பாலும் தனது சொந்த உழைப்பையே வியாபாரத்தில் பயன்படுத்துகிறார். இவர் தேவைப்பட்டால் சில பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார் அல்லது குடும்ப அங்கத்தினர்களைத் துணையாகக் கொண்டு வியாபார நடவடிக்கையை மேற்கொள்கிறார்.

### குறைந்த முதல்

தனியாள் வணிகத்தை துவங்க மிகவும் குறைந்த முதலே போதுமானது. ஆனால், கூட்டாண்மை நிறுவனத்தையோ அல்லது கூட்டுப்பங்கு நிறுமத்தையோ தொடங்க அதிக அளவு முதல் தேவைப்படுகிறது.

### நன்மைகள்

உலகிலேயே தனி நபர் கட்டுப்பாடு சிறந்தது

வில்லியம்பேசட் அவர்கள், “உலகிலேயே தனி நபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்றும் சிறிய தொழிலாக இருந்தால் மட்டுமே ஒருவர் அவ்வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்ய இயலும்” என்று கூறுகிறார். தனிநபர் கட்டுப்பாட்டுக்கு சாதகமானவை

- எளிமையானது மற்றும் விரைவாக அமைத்தல்
- நேரடி கட்டுப்பாடு
- முயற்சி மற்றும் பலன் இணைதல்
- வியாபார இரகசியங்களைக் காத்தல்
- நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்பு
- இலாபம் முழுவதையும் அனுபவித்தல்
- சிக்கன மேலாண்மை
- சட்ட சிக்கல் இன்மை
- பணியாளரிடம் நேரடித் தொடர்பு
- சமுதாய விருப்பம்

### எளிதான அமைப்பு

தொழிலமைப்பு வடிவங்களில் தனியாள் வணிகத்தை மட்டுமே சட்டச் சிக்கல்கள் ஏதுமின்றித் துவக்கலாம். ஒப்பந்தம், பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்குத் தேவையில்லை. எனவே தொழில் தொடங்க ஆர்வமுடையவர் எவரும் மிகக் குறுகிய காலத்திற்குள் இத்தொழிலைத் துவங்க முடியும்.

### நேரடி ஊக்குவிப்பு

வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனிஆள் வணிகரையே சேர்கிறது. அதில் வேறு எவரும் பங்கு கோர முடியாது. அவர் தன் வியாபாரத்தை விரிவாக்கம் செய்ய இது உரிய ஊக்குவிப்பாக அமைகிறது.

### நெகிழ்வுத் தன்மை

தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்வுத் தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். பொதுவாக தனியாள் வணிக அமைப்புகள் சிறியளவில் செயல்பட்டு வருகின்றன. தான் நடத்தி வரும் வணிகத்தை மாற்ற வேண்டும் என்றால் அதிக செலவினங்கள் இல்லாமல் மாற்றிக்கொள்ளலாம். இவ்வகைத் தொழில் அமைப்பில் தனி வணிகர் ஒருவரே உரிமையாளர் என்பதால் சந்தை நிலவரத்திற்கேற்பவும், வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்பவும் தன் வியாபார தன்மைகளை மாற்றிக்கொள்ளலாம்.

வியாபார இரகசியங்களைக் காத்தல்

வியாபார வெற்றிக்கு வியாபார இரகசியங்களைக் காத்தல் மிகவும் இன்றியமையாததாகும். இதற்குத் தனியாள் வணிக முறை பெரிதும் உகந்தது. ஏனெனில், தன் வியாபார முடிவுகளை தனியாள் வணிகர் யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. வியாபார கணக்குகளையும் மற்றும் தொழில் சார்ந்த உண்மைகளையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் தனியாள் வணிகத்தில் இல்லை

### விரைவான முடிவு

தனியாள் வணிகர் ஒருவர், தானே உரிமையாளராகவும் இருப்பதால், முடிவு எடுக்கும் முன்பு அவர் வேறு எவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே அவர் விரைவான முடிவு எடுத்து அதை காலதாமதமின்றி செயல்படுத்தவும் முடியும். இந்நன்மை கூட்டாண்மை மற்றும் கூட்டுப்பங்கு நிறுமங்களில் இல்லை.

### அதிக வெகுமதி

தனியாள் வணிகர் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத் தவறினால் நட்டம் ஏற்பட்டுவிடும். இந்நட்டவச்சம் தனியாள் வணிகரின் கடின உழைப்பிற்குத் தூண்டுகோலாய் அமைகிறது. கடின உழைப்பு, கவனமான அணுகுமுறை, பொருளாதார சிக்கனம் ஆகியன நன்மைகளை தனிவணிகருக்கு வழங்குகிறது.

### திறன்மிகு கட்டுப்பாடு

தனியாள் வணிகத்தில், உரிமையாளர் ஒருவர் மட்டுமே இருப்பதால். தொழில் நடவடிக்கைகளை நன்றாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த முடியும். இது வியாபார நடவடிக்கைகள் மீது அவர் மேற்கொள்ளும் கட்டுப்பாட்டின் திறனை அதிகரிக்க உதவும். மேலும் கொள்முதல், விற்பனை தொடர்பான முடிவுகளை தனி ஒருவரே மேற்கொள்வதால் ஏற்கெனவே திட்டமிட்டபடி மாற்றம் ஏதுமில்லாமல் வியாபாரத்தை தன் கட்டுப்பாட்டில் நடத்த வழி வகுக்கிறது.

### அதிகளவு விற்பனை

தனியாள் வணிகரே வியாபாரத்தை நிர்வகிப்பதால் தன் வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்கிறார். எனவே அவர், தன் வாடிக்கையாளர்களையும், அவர்களின் விருப்பு வெறுப்புகளையும் நன்கறிவார். இது பொருளின் தரம், வடிவம் முதலியனவற்றை வாடிக்கையாளர் விருப்பத்திற்கேற்ப வழங்க உதவுகிறது. இதனால் விற்பனை அதிகரித்து வியாபாரத்தின் நற்பெயர் உயர்கிறது.

### வியாபாரத்தை எளிதாக நடத்துதல்

தனியாள் வணிகம் சிறிய அளவிலான வியாபார நிறுவனமாதலால் தனவணிகர் தனக்கு அறிமுகமான ஒரு சிலரை பணியாளராக நியமிக்கிறார். மேலும் இப்பணியாளர்களிடம் நேரடித் தொடர்பு உள்ளதால் அவர்களைப் பற்றியும், அவர்களின் பிரச்சினைகளைப் பற்றியும்

நன்கு தெரிந்து அவர்கள் திருப்தியடையும் வகையில் அவற்றிற்கு தீர்வு காண்பார். இவ்வாறு தனியாள் வணிகர் மற்றும் அவர் பணியாளர்களிடையே ஒரு சுமுக உறவு நிலவுதல், வேலை நிறுத்தம், வேலைக்கு வராமை போன்ற இடர்பாடுகள் இன்றி வியாபாரம் சுமுகமாக நடைபெற உதவுகிறது.

### சிக்கன மேலாண்மை

தனியாள் வணிகத்தில் தனி ஒருவரே உரிமையாளராகவும், மேலாளராகவும் மற்றும் கட்டுப்பாட்டாளராகவும் செயல்படுவதால் ஊதியம் பெறும் மேலாளர், மற்றும் தொழில் நுட்பம் அறிந்த நபர்களை இவர் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில்லை. இவ்வாறு வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் அவரே முன் நின்று செய்வதால் நிர்வாகச் செலவு குறைகிறது.

### அதிக நிதி தர மதிப்பீடு (Higher credit rating)

தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. தன் வியாபாரக் கடன்களைச் செலுத்த தன் தொழிலின் சொத்துக்கள் போதாத பட்சத்தில், தன் சொந்த சொத்துக்களிலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். இதனால் தனியாள் வணிகருக்கு பலர் கடன் தர முன்வருவர். இதனால் சரக்கீந்தோர் மற்றும் வங்கிகளிடமிருந்து அதிகக் கடன் பெறும் வாய்ப்பு தனியாள் வணிகருக்கு ஏற்படுகிறது.

### சுய வேலைவாய்ப்பு

தனி வணிக அமைப்பு குறைந்த மூலதனமுடைய பல நபர்களுக்கு தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. சுதந்திரமாக வாழ விரும்பும் மனிதருக்கும் மற்றவர்களிடம் அடிமைத் தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கும் சுயதொழில் தொடங்க தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

### ஆளுமை வளர்ச்சி (Personality develoment)

தன்னம்பிக்கை, தொழில் தொடங்கும் முயற்சி, பொறுப்புணர்ச்சி, சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்ற சிறந்த பண்புகள் வளர தனி வணிக அமைப்பு வகை செய்கிறது.

பொருளாதார வளங்கள் சமமாக பகிர்ந்தளிப்பு

அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கி சுயவளர்ச்சிக்கு தனியாள் வணிகம் உதவுகிறது. தொழில் பரவலாக்கத்தை ஊக்கப்படுத்துவதுடன் ஒருவரிடமே அனைத்து செல்வமும் குவிதலை தனி வணிக அமைப்பு தடுக்கிறது.

### எளிமையான கலைப்பு

தனியாள் வணிகத்தை கலைப்பது மிகவும் எளிது.. தனியாள் வணிகர் தான் விரும்பியபோது அவரது வணிக அமைப்பினை எவ்வித சட்டமுறை சிக்கலும் இல்லாமல் கலைக்கலாம்.

### சிறந்த ஒருங்கிணைப்பு

இவ்வகை வணிக அமைப்புகள் சிறிய அளவில் குறைந்த முதலுடன் செயல்படுவதால், தனியாள் வணிகம் தனது வணிக நடவடிக்கைகளை சிறந்த முறையில் ஒருங்கிணைப்பு செய்யமுடியும்.

### தனி நபர் கட்டுப்பாட்டின் குறைபாடுகள்

தனி நபர் கட்டுப்பாட்டில் பல்வேறு நன்மைகள் காணப்படினும் சில குறைபாடுகள் இவ்வமைப்பில் உண்டு. வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் தனி நபர் ஒருவரால் மட்டுமே மேற்கொள்ள இயலாது. "தனிவணிகம் எப்போதும் ஆபத்தானது என்று தனிவணிகர் நினைக்கிறார். அவருக்கு உண்மையிலேயே எதுவும் தெரியாது என்பதும் அவருக்குத் தெரியும்". என்று வில்லியம் பேசட் அவர்கள் கூறுகிறார். கீழ்வருவன தனி நபர் கட்டுப்பாட்டின் குறைகள் ஆகும்.

1. அளவான முதல்
2. அளவான மேலாண் திறன்
3. வரையறாப் பொறுப்பு
4. பேரளவு தொழில் செய்ய இயலாமை
5. இடர்பாடுள்ள முடிவுகள்
6. நிலையற்ற தன்மை

நிதித் தடை

தனியாள் வணிக உரிமையாளர் தன்னுடைய சொந்த மூலதனத்தையும் மற்றவர்கள் வழங்கும் கடனையும் மட்டுமே நம்பி இருக்கிறார். தனி நபரிடம் உள்ள நிதி ஆதாரங்கள் வியாபாரப் பெருக்கத்திற்கேற்ப போதுமானதாக இராது என்பது வெளிப்படையானது. நிதித் தடை தனி வணிகத்திற்கு பெரும் குறையாக உள்ளது. எனவே தனி வணிகம் சிறிய அளவிலேயே எப்போதும் நடைபெறுகிறது.

### வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்

ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் மேலாண்மைத் திறமைக்கும் எல்லை உண்டு. வியாபார நடவடிக்கைகளாகிய கொள்முதல், விற்பனை மற்றும் கணக்கியல் அனைத்திலும் தனி வணிகர் வல்லுநராக திகழ இயலாது. தொழில் நுட்பம் தெரிந்த வல்லுநரை பணியில் அமர்த்த இவரது நிதி நிலையும் இடம் தராது. வியாபார வளர்ச்சிக்குக் குறைந்த மேலாண்மைத் திறன் இடையூறாக அமைகிறது.

### வரையறாப் பொறுப்பு

தனி வணிகரின் வரையறாப் பொறுப்பு அவருடைய ஆர்வத்தை பாதிப்பதாகவும், வியாபாரத்தில் நவீன எண்ணங்களைப் புகுத்தத் தடையாகவும் உள்ளது.

### குறுகிய வாழ்வு

தனியாள் வணிக உரிமையாளரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும். நீண்ட கால நோய், அவருடைய இறப்பு ஆகியவை வியாபார நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும். அவருடைய வாரிசுதாரர் ஆர்வத்துடனும் திறமையுடனும் வணிகத்தை நடத்தினால்தான் வணிகம் தொடர்ந்து செழிக்கும். இல்லையேல், அவருக்குப் பின், வியாபாரமும் முற்று பெறும். இவ்வாறு தனியாள் வணிகம் திடீர் என முடிவுக்கு வருவது நுகர்வோருக்கும், சமுதாயத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

### அவசர முடிவு

பலருடன் தீர விவாதித்து, பின்னர் எடுக்கும் முடிவானது தனி ஒரு நபர் எடுக்கும் முடிவை விட சிறப்பாக இருக்கும். தனி நபர் முடிவை விட இரு நபர் முடிவே மேலானது எனக்கூறலாம். தனியாள் வணிகத்தில் அவசரத்தில் தவறான முடிவு எடுப்பதற்கு வாய்ப்புகள் அதிகமுண்டு. ஏனெனில், பலருடன் விவாதிக்காமல் தனியாள் ஒருவரே முடிவு எடுக்கிறார். இது தவறான முடிவாக அமைய வாய்ப்பு உள்ளது. ஆதலால் அவசர முடிவுகள் தொழிலில் நட்டத்தை ஏற்படுத்தும்.

### சிறப்பு தேர்ச்சியின்மை (Non - Specialisation)

கொள்முதல், விற்பனை, கணக்குப் பதிவியல், நிதி திரட்டுதல், விளம்பரம் செய்தல் போன்ற தொழிலின் அனைத்துப் பணிகளையும் தனி வணிகர் ஒருவரே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பல மரம் கண்ட தச்சன், ஒரு மரத்தையும் வெட்டமாட்டான் என்ற பழமொழி தனியாள் வணிகத்திற்குப் பொருந்தும். மூலதனம் குறைவாக இருப்பதால், பல்வேறு தொழில் துறைகளில் வல்லுநராய் விளங்குவோரை வேலைக்கமர்த்த இயலாது. எனவே சிறப்புத் தேர்ச்சியின் பயனை தனியாள் வணிகத்தில் அடைய இயலாது.

### குறைந்த அளவு வியாபாரம்

முதல் மற்றும் திறமை குறைவாக இருப்பதால், தனி வணிகர்கள் தங்களது வணிக அமைப்புகளை சிறியதாகவே அமைத்துக் கொள்கின்றனர். இதனால் பேரளவு உற்பத்தியின் பயன்களை தனிவணிகர்களால் பெற இயலாது.

### கலந்து ஆலோசனையின்மை

தனி வணிகர் சில முக்கிய முடிவுகளை எடுக்கும்போது குடும்ப அங்கத்தினரைத் தவிர, பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கிறார். அவரது முடிவு தவறானதாகிவிட்டால், இது பெரும் நட்டத்தில் முடிவடையும்.

### நிலையற்ற தன்மை

தனி வணிக அமைப்பின் வாழ்வு உறுதியற்றது, மற்றும் நிலையற்றது. நுகர்வோரின் நுகரும் தன்மையில் ஏற்படும் விருப்பு வெறுப்பு மற்றும் தொழில் நுட்ப மாற்றம் ஆகியவற்றைப் பொறுத்தே தனி வணிகரின் வியாபாரம் அமையும்.



அவ்வாறு தனியாள் வணிகம் நவீன வளர்ச்சிக்கேற்றவாறு தன் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளாவிட்டால் அவர் பல சிரமங்களை சந்திக்க நேரிடும்.

### முழு நட்ட அபாயம்

தனியாள் வணிகர் ஒரு நபராக இருப்பதால் தொழிலில் ஏற்படும் மொத்த நட்டத்தையும் அவர் ஒருவரே ஏற்க வேண்டும்.

தனியாள் வணிகத்திற்கு ஏற்ற தொழில்கள்

தனியாள் வணிகத்திற்கு பொருத்தமான தொழில்கள் பின்வருவனவாகும்

- குறைந்த மூலதனமே தேவைப்படும் தொழில்கள் எ.கா. இனிப்பு கடை, அடுமனைகள்(Bakeries), பெட்டிக்கடை முதலியவை.
- விரைந்து முடிவெடுத்தல் முக்கியமானதாக கருதப்படும். எ.கா. பங்குதாரர்கள், மருத்துவர்கள் முதலியவை.
- குறைந்த இடர்பாடுகள் உள்ள தொழில்கள், எ.கா. ஊர்தி பழுது பார்க்கும் தொழில், சில்லறை விற்பனை நிலையங்கள் முதலியவை.
- வாடிக்கையாளர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தனிக் கவனம் செலுத்த வேண்டிய தொழில்கள் எ.கா. அழகு நிலையங்கள், தையலகம் போன்றவைகள்
- உள்ளூர் தேவை, பருவ கால தேவை மற்றும் தற்காலிக தேவை உடைய தொழில்கள் எ.கா. சிறு வியாபாரம், சலவை நிலையம், பழ விற்பனையாளர்கள் முதலியவை.

### சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு

நுகர்வோர்கள் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள். இவர்கள் வியாபாரத்தின் வெற்றியை நிர்ணயிக்கிறார்கள். வியாபாரிகள், நுகர்வோரின் தேவைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை பூர்த்தி செய்கின்றனர். நுகர்வோருக்குத் தேவையான சரக்குகள், சேவைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதில் தனி வணிகர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அன்றாடம் நுகர்வோருக்குத் தேவையான உணவு வகைகள், துணி வகைகள், எழுது பொருட்கள், சலவை, மளிகைப் பொருட்கள், புத்தகங்கள், செய்தித் தாள்கள், மருந்துப் பொருட்கள் முதலியன தனியாள் வணிகரால் அளிக்கப்படுகின்றன. இவ்வகை பொருட்களை வழங்கும் தனி வணிகர்கள் சமுதாயத்தால் மதிப்படுகிறார்கள்.

மேலும் பேரளவு தொழில்கள் நிறைந்த உலகில் தனியாள் வணிக அமைப்பு தனக்கென தனி இடத்தைப் பெற்று உள்ளது. எனவே இவ்வகையான தொழில் அமைப்புகள் சமுதாயத்தாலும் விரும்பப்படுகின்றன. சமுதாயத்திற்கு சேவை செய்வதில் தனி வணிகரின் பங்கு முக்கியமானது. கீழ்க்கண்ட வழிகளில் தனி வணிகர்கள் சமுதாயத்திற்கு தங்கள் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

### வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு

தனியாள் வணிகம் குறைந்த கல்வியறிவு உடையவருக்கும் கல்வியறிவு அற்றவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது. சமுதாயத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதில் தனி வணிகம் பெரும் பங்கு வகிக்கிறது.

### முதலீட்டிற்கான வாய்ப்பு

தனி வணிகம் சிறு முதலீட்டா ளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. இது சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்குப் பயன்படுத்த உதவுகிறது.

குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்

நிர்வாகச் செலவு குறைவாக உள்ளதால் தனி வணிகர் பொருட்களின் மீதான அதிக பட்ச விலையை விட குறைவான விலைக்கு பொருட்களை விற்பனை செய்கிறார்.

### சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்

உள்ளூர் உற்பத்தியாளரிட மிருந்து பெரும்பான்மையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் தனி வணிகரால் பயன்பெறுகின்றனர்.

### தரமான பொருட்களை அளித்தல்

தற்காலத்தில் தனி வணிகர் தன் வியாபார நன்மதிப்பைக் காக்க உயர்ந்த தரமான பொருட்களை விற்பனை செய்கிறார். விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார். இது மக்கள் நலம் உயர்த்துவதில் உத்தரவாதம் அளிக்கிறது.

தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகள்

தனி வணிகர்கள் தங்களுக்குள் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு கண் பரிசோதனை முகாம்கள், பூங்காக்களைப் பராமரித்தல், பாதையில் தடுப்புகளை ஏற்படுத்துதல், பள்ளிகளுக்கு அறைகலன்களை வழங்குதல் போன்ற பல்வேறு சமுதாய முன்னேற்ற நடவடிக் கைகளை மேற்கொள்கின்றனர்.

வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்

பலர் வியாபார உலகில் தனியாள் வணிகராக ஈடுபட வாய்ப்பளிப்பதால் வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்க உதவுகிறது.

### நுகர்வோருக்கு உதவுதல்

தனியாள் வணிகர்கள் நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்கச் செய்கிறார்கள். இதனால் நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகின்றன.

### முடிவுரை

தனி ஒரு மனிதரால் வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் திறமையாக மேற்பார்வை செய்ய இயலும் என்றால் தனி நபர் கட்டுப்பாடே, இலாபத்தின் அடிப்படையிலும், திறமையின் அடிப்படையிலும் சிறந்தது எனக் கூறலாம்.

# பாரம்பரியத்தையும் புதுமையையும் கொண்டாடும் நிகழ்வு: ஆனைவிழுந்தான் கரும்பு வெல்ல தயாரிப்பு மையத்தின் திறப்பு விழா

றஜீதன் மகேஸ்வரன்
தலைவர்
இந்திரா குழுமம்

கிளிநொச்சி பகுதியில் பாரம்பரிய கரும்பு தயாரிப்புகளை புத்துயிர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான் கரும்பு வெல்ல தயாரிப்பு மையத்தின் திறப்பு விழா 2024 நவம்பர் 22 ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வு பாரம்பரியத்தையும் முன்னேற்றத்தையும் ஒருங்கிணைத்து, விவசாயிகள் மற்றும் சமுதாயத்தினரின் ஆதரவை பெறும் நோக்கில் அமைந்திருந்தது.




**கரும்பு விவசாயத்திற்கான விழிப்புணர்வு துவிச்சக்கர வண்டி பேரணி**

நிகழ்வை குறிக்க மற்றும் கரும்பு விவசாயத்திற்கான விழிப்புணர்வை பரப்பும் நோக்கில் ஒரு வண்ணமயமான சைக்கிள் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து துவங்கி, ஆனைவிழுந்தான் தயாரிப்பு மையத்திற்குச் சென்ற சைக்கிள் பேரணி, நிலையான வேளாண்மைக்கு ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியது. இந்த பேரணி, கரும்பு விவசாயத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி, விவசாயிகள் மற்றும் பங்குதாரர்கள் இதை ஏற்கும் விதமாக அமைந்தது. இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி மற்றும் குளியாப்பட்டிய பல்கலைக்கழக கல்லூரி சேர்ந்த விவசாய இயந்திரவியல் பயிலும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள் இவர்களுடன் மணியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்

**பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள்**

இந்த திறப்பு விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்:

திரு. சுப்ரமணியம் முரளிதரன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர், பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அவர் தனது பிரதம விருந்தினர் உரையில் இது போன்ற அரசு தனியார் கூட்டு இணைவு முயற்சிகள் மாவட்டத்தின் விவசாய பொருளாதாரத்தை அதிகரிக்கும் என்றார் மேலும் இவ்வாறான முயற்சிகளுக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகம் தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்யும் என வாக்குறுதி அளித்தார்

டாக்டர் சந்திரஜித் டி சில்வா, உதவலவை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர், கரும்பு ஆராய்ச்சி முன்னேற்றங்கள் குறித்துப் பேசினார். மேலும் கரும்பு செய்தால் பாம்பு வரும் மற்றும் கரும்பு பயிர் செய்ய அதிக தண்ணீர் தேவை போன்ற கருத்துக்கள் பொய்யானவை எனக் கூறினார் நெல்லிக்கு தேவையான தண்ணீரில் நான்கில் ஒரு தண்ணீரே கரும்புக்குத் தேவை என்பதனை விவசாயிகளின் முன் உறுதியாக தெரிவித்தார்.

பேராசிரியர் க. பகீரதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி சார்பாக நிகழ்வுக்கு வருகை தந்திருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அரசகேசரி அவர்கள் உரையாற்றுகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது கரும்பு ஆராய்ச்சி கரும்பு பயிர் செய்கை மற்றும் உற்பத்தி பொருட்கள் உற்பத்தியின் பொழுது தம்மாலான அனைத்து சேவைகளையும் உதவிகளையும் களத்திலேயே வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இருந்த கரைச்சி பிரதேச செயலாளர் தவச்செல்வன் முகுந்தன் உரையாற்றுகையில் இது போன்ற நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து கரும்பு போன்ற உற்பத்தி பொருட்களை




கொள்வனவு செய்யும் வாக்குறுதியை தரும் பொழுது அவர்களுக்கு தேவையான காணிகளை நீண்ட கால குத்தகைக்கு அடிப்படையில் வழங்க முடியும் என தெரிவித்தார்.

மேலும் வடமாகாண விவசாயத் தினை களத்தின் பணிப்பாளர் திருமதி சார் சுகந்தினி செந்தில்குமரன் சார்பாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் திருமதி எஸ் விஜயதாசன் அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

கௌரவ விருந்தினராக கலந்து கொண்டிருந்த ஏற்றுமதி அபிவிருத்தி திணைக்களத்தின் வடமாகாண உதவி பணிப்பாளர் திரு கணோஜன் அவர்கள் உரையாற்றுகையில் இந்தக் கரும்பு உற்பத்தி மையத்தின் முதலீட்டாளர்களாக, இணை செயல்பாட்டாளர்களாக இணைந்து கொண்டிருக்க கூடிய கிளிநொச்சி மாவட்ட பெண் முயற்சியாளராக இருக்கும் அகல்யா ரவீந்திரன் அவர்களின் நச்சுரல் ரூட்ஸ் “யேவரசயட சுழழவள “ நிறுவனத்தினர் வருகின்ற வருடம் ஏப்ரல் மாதம் ஜெர்மனியில் நடைபெறுகின்ற ஸ்ரீலங்கா பவிலியன் கண்காட்சிக்கு ஏற்றுமதி அபிவிருத்தி திணைக்களத்தினால் அனுப்பப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

திருமதி அகல்யா ரவீந்திரன் அவர்கள் நிகழ்வின் தலைமை உரையினை ஆற்றுகின்ற பொழுது தான் மட்டுமல்லாது சமூகத்தில் உள்ள ஏனையவர்களும் நலம் பெற வேண்டும் என்ற தமது நோக்கம் பற்றி குறிப்பிட்டார் அத்துடன் எதிர்காலத்தில் மென்மேலும் கரும்பு சார் உற்பத்திகளை அதிகரிக்க உள்ளதாகவும் தெரிவித்தார். முக்கியமாக தான் ஒரு பெண்ணாக இருந்த பொழுதிலும் ஒரு பெண் முயற்சியாளராக தனது குடும்பத்தில் இருந்து போதிய அளவு ஆதரவு தனக்கு கிடைப்பதாகவும் இதற்கு தனது குடும்பத்தினருக்கு இந்நேரத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளதாகவும் உணர்ச்சி பொங்க கூறினார்.

### விவசாயிகளுக்கும் சமுதாயத்திற்கும் ஆதரவளிக்கும் மையம்

ஆனைவிழுந்தான் கரும்பு உற்பத்திகள் தயாரிப்பு மையம், உள்ளூர் விவசாயிகளுக்கு புதிய பயன்தரும் ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைகிறது. பாரம்பரிய முறைகளுடன் நவீன நடைமுறைகளை இணைக்கும் இதுபோன்ற மையங்கள், மதிப்பு கூட்டுதலும், சந்தை அணுகுமுறைகளையும் மேம்படுத்தி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுகின்றன.

### நிலையான வளர்ச்சியின் நோக்கில் ஒரு முன்னேற்றமான பங்கு

இந்த முயற்சி நிலையான வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டின் நோக்கத்துடன் அமைந்துள்ளது. இவ்விதமான நிகழ்வுகள் பாரம்பரியத்தை பாதுகாத்து, புதுமையான தீர்வுகளுக்கான வழிகளை வகுப்பதோடு, கிளிநொச்சி விவசாய சமூகங்களின் மகிழ்ச்சியான எதிர்காலத்தை உறுதிப்படுத்துகின்றன.



# 2024– இலங்கையின் பொருளாதாரம்

**இலங்கையின் அண்மைய பொருளாதார நிலைப்படுத்தல்கள், நான்கு காலாண்டு காலப் பகுதி வளர்ச்சி மற்றும் 2023 மிகை நடப்புக் கணக்கு ஆகியன முக்கிய திருப்புமுனைகளாகும்" என மாலைதீவு, நேபாளம், இலங்கைக்கான உலக வங்கியின் பிராந்திய நாட்டுப் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் குறிப்பிட்டுள்ளார்.**

தற்போதுஇலங்கையின் பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது, 2024 இல் பொருளாதார வளர்ச்சியானது 4.4 சதவீதத்தை அடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முன்னைய எதிர்வுகூறல்களை இது விஞ்சிவிட்டது. முக்கிய கட்டமைப்பு மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள் ஆகியவற்றின் உதவியின் பிரகாரம்கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறையில் ஏற்ப்பட்ட வளர்ச்சியின் காரணமாக நான்கு காலாண்டு காலப் பகுதியில் இந்த சாதகத் தோற்றப்பாடு தொடர்ந்துள்ளது என உலக வங்கி தெரிவிக்கிறது.

உலக வங்கியின் ஆண்டுக்கு இரு முறை வெளியீடான இலங்கை அபிவிருத்தி இற்றைப்படுத்தலில் (Sri Lanka Development Update), எதிர்கால வாய்ப்புகள் என தலைப்பிடப்பட்ட இன்றைய வெளியீட்டில், அறவிடல் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக காணப்படுவதாகவும் பேரினப் பொருளியல் நிலைபெறும் தன்மையை பாதிக்கக்கூடியதாக காணப்படுவதாகவும் எச்சரித்துள்ளது, அத்தோடு கடனை வெற்றிகரமாக மீள்கட்டமைத்தல், மத்திய கால வளர்ச்சி மற்றும் வறுமையை குறைத்தல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியான கட்டமைப்பு மறுசீரமைப்புகள் அவசியமாகும். ஏற்றுமதிகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு முதலீடுகளை கவருதல், பெண்கள் தொழிற்படை பங்களிப்புகளை மேம்படுத்துதல், உற்பத்தியை மேம்படுத்தல், மற்றும் வறுமை, உணவு பாதுகாப்பின்மை, நிதித் துறையில் காணப்படும் பாதிப்புறும் தன்மைகள் ஆகியவற்றினை பிரதான மறுசீரமைப்புக்களாக கொண்டு அதிகளவு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான வளர்ச்சி அடைவது அவசியமாகும்.

வியாபாரம் மூலம் உயர்வான மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான ஆற்றல்கள் நாட்டில் காணப்படுகின்றன என இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வருடாந்தம் 10 பில்லியன் டொலர் மதிப்பிடப்பட்ட பயன்படுத்தப்படாத ஏற்றுமதி சார் ஆற்றல்கள்



இலங்கையிடம் காணப்படுகின்றன, இதன் மூலம் சுமார் 142,500 புதிய தொழில்களை உருவாக்கலாம். அவசியமான மறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் உற்பத்தித் துறை, சேவைகள், விவசாயம் ஆகியவற்றில் பல்வகையில் ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்வதற்கான காத்திரமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

"இலங்கையின் அண்மைய பொருளாதார நிலைப்படுத்தல்கள், நான்கு காலாண்டு காலப் பகுதி வளர்ச்சி மற்றும் 2023 மிகை நடப்புக் கணக்கு ஆகியன முக்கிய திருப்புமுனைகளாகும்" என மாலைதீவு, நேபாளம், இலங்கைக்கான உலக வங்கியின் பிராந்திய நாட்டுப் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் குறிப்பிட்டுள்ளார். "இத்தருணத்தில், இலங்கையானது அதனது உண்மையான ஏற்றுமதி ஆற்றல்களை உணர்வதற்கான வாய்ப்புள்ளது. இது வருடாந்தம் 10 பில்லியன் டொலர்கள் என நாம் மதிப்பிட்டுள்ளோம். பூகோள பெறுமதி சந்தையில் தனது பங்குபற்றுதலை மேலும் காத்திரமாக மேற்கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு காணப்படுகின்றது, மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வளர்ச்சியில் நிலைபெறுவதற்கு புவியியல் தோற்றப்பாட்டின் சாதகப் பயன்பாடுகளைப் பயன்படுத்தி வளர்ந்து வரும் பூகோள தோற்றப்பாட்டில் நன்மையை பெற்றுக் கொள்ள முடியும். முக்கியமான பொருளாதார மற்றும் ஆளுகை சார்ந்த மறுசீரமைப்புகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த தருணத்திலிருந்து முழுமையான நன்மைகளை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.".


2025 இல் 3.5 சதவீத மிதமான வளர்ச்சி ஏற்படலாம் என இவ்வறிக்கையில் எதிர்வுகூறப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் வடுக்கள் காரணமாக மத்திய காலப் பகுதியினுள் மிதமான வழியில் வளர்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. . வறுமையானது படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் கூட 2026 ஆம் ஆண்டு வரையில் 20 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்படலாம். 2024 இல் மத்திய வங்கியின் இலக்கான 5 சதவீதத்தை விட குறைவாக பணவீக்கம் காணப்பட்டு பின் கேள்விகள் அதிகரிக்கின்ற பொழுது படிப்படியாக அதிகரிக்கும். சுற்றுலாத் துறை மற்றும் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல் ஆகியவற்றின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் நடப்பு கணக்கானது மிகையாக காணப்படலாம் என எதிர்கூறப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி இற்றைப் படுத்தலானது,தெற்காசிய அபிவிருத்தி இற்றைப்படுத்தலின்(South Asia Development Update) தோழமை ஆக்கமாகும், வருடத்திற்கு இருமுறை உலகவங்கியின் அறிக்கையானது தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சுபீட்சங்கள் பற்றி ஆராய்வதுடன் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகள் எதிர்கொள்கின்ற கொள்கை ரீதியான சவால்கள் பற்றியும் பகுப்பாய்வு செய்கின்றது. 2024 ஒக்டோபரின் வெளியீடானது பெண்கள், வேலைகள் மற்றும் வளர்ச்சி என்ற தொனிப்பொருளில் இவ்வருடம் தெற்காசியாவில் 6.4 சதவீத வளர்ச்சியை எதிர்வு கூறியுள்ளதுடன், உலகில் துரிதமாக வளர்ந்து வரும் EMDE (Emerging Markets and Developing Economy) பிராந்தியமாக தெற்காசியா மாற்றம் பெற்று வருகின்றது. தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்தல் மற்றும் பூகோள வர்த்தகம் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றில் மேலும் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றினால் இப்பிராந்தியம் துரிதமாக வளர்வதற்கும் அதனது அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் உதவுகின்றன என உலக வங்கியின் பிராந்திய தோற்றப்பாடு தெரிவிக்கின்றது.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்றிட்டம்**




### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்



**0777 43 55 57**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2024இல் வெளியிடப்பெற்றது.